விலை ரூபா: 10.00

*Registered as a Newspaper in Srilanka*

# வலம்புரி

*Valampurii*


பக்கங்கள்: பன்னிரண்டு

சங்கு 07 வள்ளுவர் ஆண்டு 2037 பங்குனி 11 சனிக்கிழமை (25.03.2006) தொலைபேசி 222 3378, 222 7644 ஒலி 96

ராம்கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
RAMCO
ஆசியாக் கண்டத்தில் முதலாம்தரத் தொழிற் சாலையிலிருந்து தயாரிக்கப்பட்டது.
ராம்கோ சீமெந்து



மாணவர்களை தாக்க தயாராகும் இராணுவம்



சமரச முயற்சியில் க.கா.குழு



சேதமாக்கப்பட்ட அன்னைபூபதியின் திருவுருவப்படம்

## • யாழ்.உயர் தொழிநுட்ப நிறுவனத்தினுள் •

# பவள் சகிதம் சென்ற ராணுவம் மாணவர்கள் மீது தாக்குதல்

### 15 இற்கும் மேற்பட்ட மாணவர்கள் படுகாயம்

(யாழ்ப்பாணம்)

அன்னை பூபதியின் நினைவு நாள் நிகழ்வில் ஈடுபட்டிருந்த யாழ்.உயர் தொழிநுட்ப நிறுவன மாணவர்கள் மீது இராணுவத்தினர் மேற்கொண்ட.கண்மூடித்தனமான தாக்குதலில் 8 மாணவிகள் உட்பட 15 மாணவர்கள் படுகாயமடைந்தனர்.

நேற்றுக் காலை 10 மணியளவில் ஐந்திற்கும் மேற்பட்ட பவள் கவச வாகனங்களுடன் தொழிநுட்ப நிறுவனத்தினுள் நுழைந்த 500 இற்கும் மேற்பட்ட இராணுவத்தினர் மேற்கொண்ட கண்மூடித்தனமான தாக்குதலிலேயே மாணவர்கள் படுகாயமடைந்தனர்.

படுகாயமடைந்தவர்கள் யாழ்.போதனாவைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். (12 ஆம் பக்கம் பார்க்க)

## அரசாங்கத்தின் ஒடுக்குமுறைகளை பார்த்துக் கொண்டிருக்க முடியாது

### தமிழ்ச்செல்வன் எச்சரிக்கை

(மன்னார்)

அரசின் ஒடுக்கு முறைகளை தமிழீழ விடுதலைப்புலிகள் இனியும் பொறுத்துக் கொள்ள மாட்டார்கள் என்று தமிழீழ அரசியல் துறைப்பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் எச்சரித்துள்ளார்.

மன்னார் ஆண்டாங்குளம் றோமன் கத்தோலிக்க பா டசாலையில் பிரதேச மக்களுக்கான சமகால அரசியல் கருத்தரங்கில் கலந்துகொண்டு உரையாற்றியபோதே இவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் பேசுகையில், கடந்த நான்கு ஆண்டுகளாக நாம் சமாதானப் பேச்சுக்களில் பொறுமையுடன் ஈடுபட்டு வந்தோம். சமாதானத்தின் மூலம் போரை முடிவுக்குக் கொண்டு வரலாம் என்ற நோக்கத்திலேயே பேச்சுக்களில் பங்கு கொண்டோம்.

ஆனால், அரசும் அதன் படைகளும் அப்படிச் செயற்படாமல் தமிழ் மக்கள் மீது தொடர்ச்சியாக ஒடுக்கு முறைகளை மேற்கொண்டு வருகின்றன. (12 ஆம் பக்கம் பார்க்க)

## துணைக்குழுக்களின் ஆயுதங்கள் முழுமையாக களையப்பட்டு விட்டன

### இராணுவத் தளபதி ஊடகவியலாளர்களுக்கு தெரிவிப்பு

(கொழும்பு)

வடக்கு கிழக்குப் பிரதேசங்களில் அரச கட்டுப்பாட்டுப் பகுதிகளில் இயங்கிய அனைத்து துணை குழுக்களின் ஆயுதங்களும் தற்போது முழுமையாக களையப்பட்டு விட்டன.

இவ்வாறானதொரு சூழ்நிலையில் அரச கட்டுப்பாட்டில் இல்லாத பிரதேசங்களில் தாக்குதல்கள் தொடருமாயின் அதற்கு இராணுவத்தினரால் பொறுப்புக்கூற முடியாது என தளபதி லெப்டினன் ஜெனரல் சரத்பொன்சேகா தெரிவித்துள்ளார்.2001 ஜனவரி மாதம் 1 ஆம் திகதி அப்போது இராணுவப் பேச்சாளராக இருந்த பிரிகேடியர் சரத் கருணாரட்ணவினால் ஆரம்பித்து வைக்கப்பட்ட இராணுவத்தின் உத்தியோக பூர்வ இணையத்தளத்தை மீளவும் திறந்து வைத்தபின் ஊடகவியலாளர்களுக்கு கருத்துத் தெரிவித்தபோதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அரசாங்கமும் விடுதலைப்புலிகளும் அடுத்த தடவை பேச்சுக்களுக்காக அமரும்போது புரையோடிப் போயுள்ள இனப்பிரச்சினையின் அடிப்படை (12 ஆம் பக்கம் பார்க்க)

## வவுனியாவில் ஹர்த்தால்

துணைப் படைகளின் ஆட்கடத்தல், படுகொலைகள், கொள்ளைகள் போன்ற நடவடிக்கைகளைக் கண்டித்து வவுனியாவில் எதிர்வரும் திங்கட்கிழமை கதவடைப்புப்போராட்டம் மேற்கொள்ளப்படவுள்ளது.

துணைப் படைகளின் இவ் வகையான சமூகவிரோத நடவடிக்கைகளை உடன் நிறுத்துமாறும் வலியுறுத்தி இக் கதவடைப் புப் போராட்டம் மூன்று நாட்கள் முன்னெடுக்கப்படவுள்ளதாக பொது அமைப்புக்கள் தெரிவித்தன. (ச)

## கட்டுநாயக்காவில் சினைப்பர் பாகம் மீட்பு

கட்டுநாயக்க விமான நிலையத்தில் சினைப்பர் துப்பாக்கியின் பாகங்கள் மீட்கப்பட்டுள்ளன. இவை விடுதலைப்புலிகளிடம் கையளிக்கவே ஜேர்மனியில் இருந்து கொண்டுவரப்பட்டுள்ளதாக இரகசியப்பிரிவு (12 ஆம் பக்கம் பார்க்க)

EXPOAIR
your friend in the skies...
ஒதுக்கீடுகளுக்கு அழையுங்கள்:
021 - 222 3891, 222 6297, 077 - 2349999,
011 - 2372952/3, 011 - 2360290/1
e.mail:- jaffna @ expoavi.com, reservations @ expoavi.com.
எக்ஸ்போ எயார்
வானத்தில் உங்கள் நண்பன்...
இலங்கையில் முன்னணி வகிக்கும் உள்ளூர் விமான சேவை...

நடுவுநிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# அமைச்சர்களின் எண்ணிக்கையை குறைக்குமாறு ட்ரான்ஸ் பரன்ஸி அமைப்பு கோரிக்கை

அரசாங்கத்தின் அமைச்சரவை உறுப்பினர்களின் எண்ணிக்கையைக் குறைக்குமாறு 'ட்ரான்ஸ் பரன்ஸி' இன்ரநஷனல் அமைப்பு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவிடம் கோரிக்கை விடுத்துள்ளது.

சில அமைச்சர்கள் பொது மக்களின் நிதிகளைப் பாரியளவில் விரயம் செய்வதாகவும் இந்த அமைப்பு குற்றம் சுமத்தியுள்ளது.

இலங்கை போன்ற நாடுகளில் மாத்திரமே அமைச்சரவை உறுப்பினர்களின் எண்ணிக்கை அதிகரித்துக் காணப்படுவதாக ட்ரான்ஸ் பரன்ஸி இன்ரநஷனல் சுட்டிக்காட்டியுள்ளது.

அரசாங்கத்தின் சில அமைச்சர்கள் வெளிநாடுகளுக்குச் செல்லும் போது தங்களது உறவினர்களையும் அழைத்துச்சென்று பொது மக்களின் நிதிகளை வீண்விரயம் செய்கின்றனர்.

அவர்கள் தங்களது தனிப்பட்ட பயணங்களுக்குச் சொந்த பணத்தைச் செலவிட வேண்டும் எனவும் ட்ரான்ஸ் பரன்ஸி இன்ரநஷனல் அமைப்பு வலியுறுத்தியுள்ளது.

இதேவேளை அமைச்சர்களின் இவ்வாறான நடவடிக்கைகளை ஜனாதிபதி மஹிந்த கவனத்தில் எடுத்து செயற்பட்டமை குறித்தும் அந்த அமைப்பு வரவேற்பை தெரிவித்துள்ளது.

இந்தநிலையில் பொதுமக்களின் நிதியை வீண் விரயமாகக்குவதைத் தடுக்கும் வகையில் இந்த நடவடிக்கைகளில் தொடர்புடைய அமைச்சர்கள் மீது ஜனாதிபதி நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் ட்ரான்ஸ் பரன்சி இன்ரநஷனல் அமைப்பு கோரிக்கை விடுத்துள்ளது.

(து)

## பயிற்சிநெறி விஸ்தரிப்பு

(சாவகச்சேரி)

தென்மராட்சி வலய பாடசாலைகளில் நடாத்தப்படும் முறைசாரா பயிற்சி நெறிகள் மேலும் இரு பாடசாலைகளுக்கும் விஸ்தரிக்கப்பட்டுள்ளதாக முறைசாரக் கல்வி உதவிப் பணிப்பாளர் தா.பாலசுந்தரம் தெரிவித்துள்ளார்.

மீசாலை வீரசிங்கம் பாடசாலையிலும் மட்டுவில் கமலாசினி வித்தியாலயத்திலும் உடையமைக்கும் பயிற்சி நெறிகள் ஆரம்பிக்கப்படவுள்ளதாகத் தெரிகிறது.

எதிர்வரும் 5ஆம் திகதிக்கு முன்னர் அப்பாடசாலைகளில் விண்ணப்பப்படிவங்களைப் பெற்று பூர்த்திசெய்து ஒப்படைக்குமாறு தா.பாலசுந்தரம் கேட்டுள்ளார். (து-108)

## பதவி வெற்றிடம்

(சாவகச்சேரி)

தென்மராட்சி வலயத்துக்கு உட்பட்ட பாடசாலையில் முறைசாரா பயிற்சி நெறியில் ரேடியோ, ரி.வி. திருத்தல் பயிற்சி நெறிகளுக்குத் தகுதி வாய்ந்த போதனாசிரியர்கள் தேவைப்படுகிறார்கள்.

பொருத்தமான, தகுதிவாய்ந்த ஆசிரியர்கள் சுயமாகத் தயாரிக்கப்பட்ட தமது விண்ணப்பங்களை எதிர்வரும் 5ஆம் திகதிக்கு முன் தென்மராட்சி வலய கல்விப் பணிமனையில் ஒப்படைக்குமாறு முறைசார கல்வி உதவிப் பணிப்பாளர் தா.பாலசுந்தரம் தெரிவித்துள்ளார். (து-108)

# நீரிழிவு நோயைத் தடுக்க விசேட விழிப்புணர்வுத் திட்டம்

செலிங்கோ– நீரிழிவு நிலையம்– நீரிழிவு நோயைத் தடுப்பது பற்றிய விசேட விழிப்புணர்வுத் திட்டத்தை அமுல்செய்யவுள்ளது.

இதன் பிரகாரம்– கொழும்பிலுள்ள நீரிழிவு நிலையத்திலிருந்து விசேட நடைப் பயணம் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இந்த நிகழ்வு நாளை நடைபெறும்.

இதன்போது சரியான போஷாக்கு நடைமுறைகளை பின்பற்றுதல், நீரிழிவைத் தடுப்பது எவ்வாறு என்பது பற்றி பொது மக்களுக்கு இலவச மருத்துவ ஆலோசனைகள் வழங்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

(த-7)

# திருப்பாடுகளின் காட்சி

(யாழ்ப்பாணம்)

யாழ்.திருமறைக் கலாமன்றத்தால் ஆண்டுதோறும் கிறிஸ்தவர்களின் தவக் காலத்தில் மேடையேற்றப்படும் இயேசுவின் திருப்பாடுகளின் காட்சி இம்முறை எதிர்வரும் ஏப்ரல் மாதம் 5ஆம் திகதி முதல் 9 ஆம் திகதி வரை ஐந்து நாட்களுக்கு மேடையேற்றப்படவுள்ளது.

திருமறைக் கலாமன்ற இயக்குநர் பேராசிரியர் அருள்திரு. நீ.மரியசேவியர் அடிகளாரின் எழுத்துரு, நெறியாள்கையில் தயாரிக்கப்பட்டு முதன் முதலாக 1970களில் திருமறைக் கலாமன்றத்தால் மேடையேற்றப்பட்டதுடன், தொடர்ந்தும் பல்வேறு ஆண்டுகளில் இலங்கையின் பல பகுதிகளிலும் உலக நாடுகள் பலவற்றிலும் மேடையேற்றப்பட்டு அனைவரது வரவேற்புக்களையும், பாராட்டுக்களையும் பெற்ற பலிக்களம் திருப்பாடுகளின் காட்சியேகாலத்திற்கேற்றமாற்றங்களுடன் இம்முறை மீண்டும் மேடையேற்றப்படவுள்ளது.

குறிப்பிட்ட நாட்களில் தினமும் மாலை 7.00 மணிக்கு திருப்பாடுகளின் கட்சி ஆரம்பமாகும் என்றும், பார்வையாளர்கள் இறுதி நாட்கள்வரை காத்திருக்காமல் ஆரம்ப நாட்களில் பார்வையிட்டு இறுதி நாட்களில் நிலவும் நெருக்கடிகளைத் தவிர்க்க உதவுமாறும் திருமறைக் கலாமன்றம் வேண்டுகோள் விடுத்துள்ளது.

200க்கும் அதிகமான கலைஞர்கள் பங்கேற்கும் பலிக்களம் ஆற்றுகைக்கான முன் ஏற்பாடுகள் தற்பொழுது நடைபெற்று வருகின்றன.

இதேவேளை கொழும்பு திருமறைக் கலாமன்றம் தயாரித்து வழங்கும் தவக் கால ஆற்றுகையான கழுமரச் சிலுவை இன்று மாலை 7.00 மணிக்கு கொட்டாஞ்சேனை புனித லூசியாள் பேராலய முன்றலில் மேடையேற்றப்படவுள்ளது. (த-132,133,72)

## கற்கைநெறி

(கோப்பாய்)

2005/ 2006 ஆம் ஆண்டுக்கான ஆரம்ப பாடசாலை முகாமைத்துவ டிப்ளோமாக் கற்கை நெறி எதிர்வரும் ஏப்ரல் மாதம் 7ஆம் திகதி மீபேயில் அமைந்துள்ள தேசிய கல்வி நிறுவகத்தின் கல்வித் தலைமைத்துவ அபிவிருத்தி நிலையத்தில் ஆரம்பமாகவுள்ளதாக நிறுவன உதவிப்பணிப்பாளர் நாயகம் வில்பிறட் ஜே.பெரேரா தெரிவு செய்யப்பட்ட விண்ணப்பதாரிகளுக்கு கடித மூலம் அறிவித்துள்ளார்.

இக்கற்கை நெறிக்கு விண்ணப்பித்த ஆரம்ப பாடசாலை அதிபர்களே தெரிவு செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (து-79)

## சேவை நலன் பாராட்டு

(சாவகச்சேரி)

தென்மராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி அ.வேதநாயகம் அவர்களின் சேவையைப் பாராட்டி கௌரவிக்கும் விழா சாவகச்சேரி டிறிபேக் கல்லூரியில் கடந்த செவ்வாய்க்கிழமை டிறிபேக் கல்லூரி அதிபர் க.அருந்தவபாலன் தலைமையில் நடைபெற்றது.

பாடசாலை அபிவிருத்திச் சங்க செயலாளர் தா.பாலசுந்தரம், பழைய மாணவர் சங்க செயலாளர் சண்முகலிங்கம் (மக்கள் வங்கி முகாமையாளர்) ஆகியோரும் இதில் கலந்து கொண்டனர்.

பாடசாலை பழைய மாணவர் சங்கமும், பாடசாலை அபிவிருத்திச் சங்கமும் இணைந்து வலயக் கல்விப் பணிப்பாளருக்கு தங்க மோதிரம் ஒன்றைப் பரிசாக அளித்தனர்.

பெற்றோர் சங்க சார்பிலும் சாவகச்சேரி கைத்தொழில் வணிகர்மன்ற சார்பிலும் பரிசில்கள் வழங்கப்பட்டன. (து-108)

## பாடசாலை அபிவிருத்தி சங்கப் பொதுக்கூட்டம்

(சாவகச்சேரி)

சாவகச்சேரி டிறிபேக் கல்லூரியின் இவ் ஆண்டுக்கான பாடசாலை அபிவிருத்திச் சங்கப் பொதுக் கூட்டம் கடந்த செவ்வாய் கிழமை சாவகச்சேரி டிறிபேக் கல்லூரியில்

கல்லூரி அதிபர் க.அருந்தவபாலன் தலைமையில் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் தலைவராக க.அருந்தவபாலனும், செயலாளராக தா.பாலசுந்தரமும் செயலாளராக மனோரஞ்சித கிருஷ்ணகுமாரும் தெரிவு செய்யப்பட்டனர். அத்துடன் 16 பேர் கொண்ட நிர்வாகசபையும் தெரிவு செய்யப்பட்டது. இதில் 4பேர் ஆசிரியர்களும் மிகுதி 12 பேர் பெற்றோர்களும் ஆவர்.

(து-108)

# 'விய' வருட பஞ்சாங்கம்

இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் ஆராய்ச்சிப் பிரிவின் மூலம் எதிர்வரும் சித்திரை விய வருட இந்துப் புத்தாண்டை முன்னிட்டு பஞ்சாங்கம் வெளியிடப்பட்டுள்ளது.

இப்பஞ்சாங்கத்தில் விய புதுவருட பிறப்பு, சுப கருமங்கள், புதுவருட பலன், மாதாந்த ரீதியான பலன்கள், இந்துக்களின் விசேட தினங்கள், நாயன்மார் குருபூசை தினங்கள், சுபமுகூர்த்தங்கள், இலங்கையின் பிரபல ஆலயங்களின் உற்சவ தினங்கள் போன்ற பல விடயங்கள் உள்ளடக்கப்பட்டுள்ளன.

இப்பஞ்சாங்கம் திணைக்களத்தின் மூலம் இலவசமாக விநியோகிக்கப்படுகின்றது. இதனைப் பெற்றுக்கொள்ள விரும்புவோர் 248, 1/1, காலி வீதி, கொழும்பு– 04 இல் அமைந்துள்ள திணைக்களத்தில் நேரடியாகப் பெற்றுக்கொள்ளலாம்.

கடித மூலம் பெறவிரும்புவோர் பத்து ரூபா பெறுமதியான முத்திரை ஒட்டப்பட்ட 22 செ.மீ. நீளமும், 14 செ.மீ. அகலமும் கொண்ட பெரிய கடித உறையில் சுயமுகவரி எழுதி அதனை திணைக்கள முகவரிக்கு அனுப்பி வைப்பதன் மூலம் பெற்றுக் கொள்ளலாம்.

திணைக்களத்திற்கு அனுப்பும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் புதிய விய வருட பஞ்சாங்கம் 2006 எனக் குறிப்பிடுதல் வேண்டும் என மேற்படி திணைக்களத்தின் பணிப்பாளர் சாந்தி நாவுக்கரசு தெரிவித்துள்ளார். (து)

# கள்ளநோட்டு கண்டுபிடிப்பு

திருநெல்வேலியிலுள்ள அரசவங்கியொன்றில் பணத்தை வைப்பிலிட வந்த பெண் ஒருவரிடமிருந்து ஆயிரம் ரூபா கள்ள நோட்டு நேற்று முன்தினம் வங்கி அதிகாரிகளினால் கண்டுபிடிக்கப்பட்டது.

யாழ்.பல்கலைக்கழக மக்கள் வங்கிக் கிளையில் வைப்பிலிடச் சென்ற பெண்ணிடமிருந்து மேற்படி கள்ள நோட்டு கண்டுபிடிக்கப்பட்டது.

இதனையடுத்து வங்கி அதிகாரி அதனை துளையிட்டதுடன் மேற்படி நோட்டை வழங்கிய வங்கியில் சென்று இது தொடர்பாகக் கேட்குமாறும் அறிவுரை வழங்கியதாகத் தெரியவருகின்றது. (த-7)

# மின்கட்டணம் அதிகரிக்கப்படமாட்டாது

மின்சாரக் கட்டணத்தை அதிகரிக்கும் நோக்கம் எதுவும் அரசாங்கத்திற்கு இல்லை என்று மின்சக்தி அமைச்சர் ஜோன் செனவிரட்ண தெரிவித்துள்ளார்.

மின் கட்டணங்களை 12 சதவீதத்தால் உயர்த்துமாறு ஆசிய அபிவிருத்தி வங்கி ஆலோசனை வழங்கிய போதிலும் நாம் அதனை நடைமுறைப்படுத்தவில்லை என்றும் அமைச்சர் தெரிவித்துள்ளார்.

கடந்த புதன்கிழமை அரசாங்கத் தகவல் திணைக்களத்தில் இடம்பெற்ற செய்தியாளர் மாநாட்டில் கருத்து தெரிவிக்கும்போது அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்,

மின் கட்டணங்களை அதிகரிக்கும் நோக்கம் அரசாங்கத்திற்கு இல்லை. மின் கட்டணங்களைக் குறைக்கவே முயற்சிக்கின்றோம். ஒவ்வொரு வருடமும் 200 மெகா வோட்ஸ்மின்சக்திநாட்டிற்கு அதிகமாகதேவைப்படுகின்றது.

எனவே அனல்மின்நிலையத்தை அமைப்பதற்கு அமைச்சரவையில் அங்கீகாரம் கிடைத்துள்ளது எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (த-9)





யா.உரும்பிராய் றோ.க.த.க பாடசாலை தடகள விழா நிகழ்வில் மாணவர்கள் பானை பத்திரம் நிகழ்வில் பங்குபற்றுவதை முதலாவது படத்திலும், தரம் 1 மாணவர்களின் சங்கீதக் கொடி நிகழ்ச்சியாளர்கட்குOn the spot பரிசு வழங்கும் நிகழ்வில் ஒரே தடவையில் ஐந்து மாணவர்கட்கு அதிபர்கள் அ.அருள்நந்தி சிவம், க.கனகராசா, வே.பாலசுப்பிரமணியம், எஸ்.புஸ்பராசா, அ.ஈஸ்வரநாதன் ஆகியோர் பரிசுப் பொதிகளை வழங்கி மகிழ்விப்பதையும் படங்களில் காணலாம். (படம்:கோப்பாய் நிருபர்)

# அதிகளவான ஆண்களுக்கு வெளிநாட்டு வேலைவாய்ப்பு

(கொழும்பு)

இவ்வாண்டு கூடுதலான ஆண்களுக்கு வெளிநாட்டு வேலை வாய்ப்புகளைப் பெற்றுக்கொடுக்க நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன.

இந்த வருடத்தில் மலேஷியாவுக்கு அதிகமான ஆண்களை அனுப்பிவைப்பதுபற்றி வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகம் கவனம் செலுத்திவருகிறது.

இந்த அமைப்பில் பதிவு செய்யப்பட்டிருக்கும் முகவர் நிலையங்களூடாக ஒவ்வொரு வருடமும் சுமார் 2 இலட்சத்து 80ஆயிரம் பேருக்கு வெளிநாட்டு வேலை வாய்ப்பு பெற்றுக்கொடுக்கப்படுவதாக பணியகத்தின் தலைவர் சுறாஜ் தத்தனிய தெரிவித்தார்.

இதேவேளை, கடல் கடந்து வேலைசெய்யும் இலங்கைத் தொழிலாளர்கள் தாயகத்துக்கு தேடிக் கொடுக்கும் வருவாய் 2 ஆயிரத்து 225 கோடியைத் தாண்டுகிறது.

இலங்கைக்கு கூடுதலான அந்நியச் செலாவணியைப் பெற்றுத்தரும் துறையாகக் காணப்படுவதால், இதுகுறித்து அரசாங்கம் கூடுதல் கவனம் செலுத்துவது அவசியம் என வெளிநாட்டு வேலை வாய்ப்புப் பணியகத்தின் தலைவர் மேலும் தெரிவித்தார். (கு-7)

## ஊரி மணல் ஏற்ற விண்ணப்பம்

வேலணைப் பிரதேச செயலர் பிரிவில் ஊரி மணல் ஏற்றுவதற்கு அனுமதி கோரிச் சமர்ப்பிக்கப்பட்ட விண்ணப்பங்களை கிராம சேவையாளர்கள்பிரதேசசெயலரின் அனுமதிக்காக அனுப்பும் போது ஊரிமணல் ஏற்றும் வாகனச் சாரதியின் பெயர் தேசிய அடையாள அட்டை இலக்கம் என்பவற்றையும் குறிப்பிட்டு அனுப்பும்படி பிர தேச செயலாளர் கேட்டுள்ளார். (து-134)

# விடுதலைப் போருக்கு எதிரான முயற்சிகள் யாவும் எமக்குச் சாதகமான நிலையையே தோற்றுவிக்கும்

## மகளிர் அரசியல்துறைப் பொறுப்பாளர் தமிழினி

(கிளிநொச்சி)

சமாதானத்தின்பெயரால்பொறி வைத்தவர்களான சிங்கள மற்றும் சர்வதேச சக்திகளை நாம் பொறியில் சிக்கவைத்துள்ளோம் என தமிழீழ விடுதலைப் புலிகளின் மகளிர் அரசியல் துறைப் பொறுப்பாளர் தமிழினி தெரிவித்தார்.

முல்லைத்தீவு, முள்ளியவளையில் கடந்த புதன்கிழமை நடைபெற்ற புலிகளின் குரலின் முத்தமிழ்க் கலையரங்க நிகழ்வில் சிறப்புரையாற்றும்போதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

அவர் அங்கு மேலும் கூறுகையில், தற்போதைய அரசாங்கத்தின் போக்குகள் தமிழீழ விடுதலைப்போராட்டத்தினை வெற்றிக்கு இட்டுச் செல்லும். விடுதலைப் போராட்டத்தை மிகவும் உயர்ந்த இராஜதந்திரத்தோடும் நவீன படைத் தொழில்நுட்பத்தோடும் வளர்த்தெடுத்திருக்கின்றோ' .

தமிழீழ தேசியத்தலைவர் எமது விடுதலைப்போராட்டத்தைஉயர்ந்த ஒரு நிலைக்குக் கொண்டுவந் துள்ளார். தென்னிலங்கையில் மேற்கொள்ளப்படும்விடுதலைப்போராட்டத்திற்கு எதிரான ஒவ்வொரு நடவடிக்கையும், கருத்துக்களும் எதிரிகள் எதிர்பார்த்ததைப் போல் இல்லாமல், தமிழீழ விடுதலைப் போராட்டத்திற்குச் சாதகமான பலாபலன்களைக் கொடுக்கும்.

தமிழீழ விடுதலைப் போராட்டத்தின் வெற்றியை ஜீரணிக்க முடியாமல் சிங்கள தேசம் பல்வேறுபட்ட சதி முயற்கிகளை மேற்கொண்டுவருகின்றது.

அது தமிழீழ விடுதலைப் புலிகளின் வெற்றி இலக்கை நோக்கி போராட்டத்தை மேலும் வேகமாக நகர்த்திக்கொண்டு செல்லும் என்பதுதான் உண்மை. ஏனெனில் போராட்ட வரலாற்றில் தமிழர்களுக்கு அவலத்தை தந்தவனுக்கு அவலத்தைத் திருப்பிக்கொடுத்துள்ளோம். தமிழீழ விடுதலைப் புலிகளுக்குப்பொறிவைத்துவீழ்த்த நினைத்த அரசியல் சக்திகளுக்கும் சர்வதேச சக்திகளுக்கும் எதிராகஅந்தப்பொறியைதிருப்பிவைத்திருக்கின்றோம்.

இந்தச் சமாதானச் சூழல் மூலமாக தமிழ் மக்களை விடுதலைப் போராட்டத்தில் இருந்து அன்னியப்படுத்திவிடலாம். தமிழ்மக்களின் போராட்ட மன நிலையை நீர்த்துப் போகச் செய்யலாம். அதன் மூலம் தமிழீழ விடுதலைப் போராட்டத்தை பலம் குன்றிய விடுதலைப் போராட்டமாக மாற்றி அமைக்கலாம் என்ற நோக்கத்தோடு அரசால் இச் சமாதான சூழல் நீட்டப்படுகின்றது.

ஆனால் தமிழீழ விடுதலைப் போராட்டத்திற்கு வைக்கப்பட்ட இச்சமாதானப் பொறியை மிகவும் லாவகமாகப் பயன்படுத்தி தமிழீழ விடுதலைப் போராட்டத்தின் நியாயத்தன்மையை சர்வதேசத்திற்கு எடுத்துச் சொல்லுகின்ற ஒரு அரசாங்க, சமாதானத்தை த்மிழீழ விடுதலைப் புலிகள் பயன்படுத்துகின்றனர் என்றார். (து)

# சட்டவிரோத மின்பாவனையாளர்களால் பாதிக்கப்படும் சட்டபூர்வ மின்பாவனையாளர்

(கொழும்பு)

சாவகச்சேரி பகுதியில் சட்டவிரோதமாக மின்சாரம் பெறுபவர்களின் தொல்லைகள் காரணமாக சட்டபூர்வமான முறையில் மின் விநியோகத்தைப் பெறுபவர்கள் நாளாந்தம் பாதிக்கப்பட்டு வருகின்றனர்.

இதனால் இரவு வேளைகளில் மாணவர்களின் கல்வி பாதிப்படைவதாக பெற்றோர் தரப்பில் தெரிவிக்கப்படுகின்றது.

சட்டவிரோதமான முறையில் மின்சாரம் பெறுபவர்கள் மீது இலங்கை மின்சாரசபையினர் கடும் நடவடிக்கைகள் எடுத்திருந்த போதிலும் கூட, அவர்களின் கண்களுக்குத் தெரியாத முறையில் சட்டவிரோதமாக மின்சாரத்தைப் பெற்று வருகின்றனர்.

இது இவ்விதமிருக்க, சாவகச்சேரி பகுதியிலுள்ள சரசாலை கிராமத்துக்கு மிகவிரைவில் மின் விநியோகம் வழங்கப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. (க-16)

# சுனாமி அபாய அறிவிப்புக் கட்டமைப்பு அடுத்தவருடம் ஆகஸ்ட்டுக்கு முன் நிறுவப்படும்

சுனாமி அபாய அறிவிப்புக் கட்டமைப்பு அடுத்த வருடம் ஆகஸ்ட் மாதத்திற்கு முன்னர் இந்து சமுத்திரத்தில் நிறுவப்படவிருப்பதாக வளிமண்டலவியல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

உலக வளிமண்டலவியல் தினத்தை முன்னிட்டு நடைபெற்ற வைபவம் ஒன்றில் உரையாற்றிய அந்தத் திணைக்களத்தின் பிரதிப் பணிப்பாளர் லலித் சந்திரபால இந்தத் தகவலைத் தெரிவித்துள்ளார்.

நவீனசாதனங்களுடன்அமைக்கப்படவுள்ள உத்தேச சுனாமிஅபாய அறிவிப்புக் கட்டமைப்பின் மூலம் சுனாமி போன்ற கடல் அனர்த் தம் ஏற்படும் முன்னர் அதுகுறித்து முன்கூட்டியே அபாய அறிவிப்பு விடுக்கக்கூடிய வாய்ப்பு ஏற்படுமென்று பிரதிப் பணிப்பாளர்மேலும் தெரிவித்துள்ளார். (கு-9)

# இராசி பலன்

25.03.2006

(பங்குனி 11, சனிக்கிழமை)

ஏகாதசி பின்னிரவு 1.54 மணிவரை

திருவோணம் பின்னிரவு 2.11 மணிவரை

இராகுகாலம் 9.15-10.45மணிவரை

சுபநேரம் 3.15-4.45 மணிவரை

| | |
|---|---|
| மேடம் | பிரபுத்தனம், எடுத்தகாரியம் கைகூடும், நன்கொடை, மனமகிழ்ச்சி. |
| இடபம் | சரீரப்பிரயாசை, வயிற்றுக்கோளாறு, முயற்சி தாமதம், எதிர்பாராத செலவு. |
| மிதுனம் | மனக்கவலை, பொருள் விரயம், வாகன பயம், முயற்சி தாமதம். |
| கடகம் | மனோதைரியம், கீர்த்தி, போசனசுகம், தொழில் நன்மை. |
| சிங்கம் | சுப நிகழ்வு, தடைப்பட்ட காரியம் கைகூடும், ஆரோக்கியம், விருந்துபசாரம். |
| கன்னி | அஜீரண ரோகம், பணக்குறைவு, கௌரவக்குறைவு, காரியதாமதம். |
| துலாம் | தனவிரயம், தன்னம்பிக்கைக்குறைவு, புதிய விடயம், வேலையில் ஆர்வம். |
| விருச் | நறகீர்த்தி, மனோதைரியம், காரியநன்மை, சகோதரர் உதவி. |
| தனுசு | அதிக செலவு, மனோசங்கடம், போசன சுகக்குறைவு, ரோகநிலை. |
| மகரம் | வெகுமானம், மாதர் நட்பு, சயனசுகம், போசனசுகம். |
| கும்பம் | சோம்பல்நிலை, சிந்தனை மிகுதி, தன விரயம், பிரயாணம். |
| மீனம் | தனதானிய சோக்கை, சயனசுகம், குடும்ப மகிழ்ச்சி, காரியசித்தி. |

பழைய நேரப்படி கணிப்பிடப்பட்டது.
- வளவன்

# விளையாட்டு விழா

(யாழ்ப்பாணம்)

வலிகாமம் மேற்கு சங்கானை பிரதேச செயலகர் பிரிவிற்கு உட்பட்ட விளையாட்டுக்கழகங்களுக்கிடையேயான வருடாந்த விளையாட்டு விழா யா/ பண்ணாகம் மெய்கண்டான் மகாவித்தியாலய மைதானத்தில் நாளை ஞாயிற்றுக்கிழமை வலி மேற்கு பிரதேச செயலர் சி.ஏ.மோகன்றாஸ் தலைமையில் இடம்பெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்.மாவட்ட அரச அதிபர் கே.கணேஷ் கலந்து கொள்ளவுள்ளார். சிறப்பு விருந்தினர்களாக யாழ்.மாவட்ட மேலதிக அரச அதிபர் ஆ.சிவசுவாமி உதவி அரசாங்க அதிபர் வே.வீரபத்திரப்பிள்ளை பாராளுமன்ற உறுப்பினர் திருமதி பத்மினி சிதம்பரநாதன் ஆகியோரும் கலந்து கொள்ளவுள்ளனர். (க-132,133)

* * *

நல்லூர் பிரதேச செயலகத்துக்குட்பட்ட பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கிடையிலான இவ் ஆண்டுக்கான விளையாட்டு விழா நாளை ஞாயிற்றுக்கிழமை பி.ப.2.30மணிக்கு யாழ்.இந்துக் கல்லூரி மைதானத்தில் நல்லூர் பிரதேச செயலர் திருமதி எஸ்.தெய்வேந்திரம் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்.மாவட்ட இணைப்பாளர் திருமதி கமலா சிவ சிதம்பரமும், சிறப்பு விருந்தினராக யாழ்.இந்துக் கல்லூரி அதிபர் வீ.கணேசராஜாவும் கலந்து கொள்ளவுள்ளனர். (க-132, 133)

# இயங்காதுள்ள இந்துசமய நிறுவனங்களை இயங்கவைப்பதற்கு நடவடிக்கை

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண மாவட்டத்தில் உருவாக்கப்பட்ட இந்துசமய நிறுவனங்களில் பெரும்பாலானவை எவ்விதமான செயல்பாடுகளும் இன்றி இருக்கும் நிலையை மாற்றுவதற்கான முயற்சிகளை இந்து சமய கலாசார திணைக்களம் மேற்கொள்ளவுள்ளது எனத் தெரியவருகின்றது.

இந்த வகையில் வலிகாமம் பிரதேசத்தில் உருவாக்கப்பட்ட இந்து சமய நிறுவனங்களில் பெரும்பாலானவை நல்லபடியாக இயங்கி, பொதுமக்களுக்கு காத்திரமான சேவைகளை ஆற்றிவருகின்றன. அதேசமயம் தென்மராட்சி மற்றும் ஏனைய பிரதேசங்களிலுள்ள இந்து சமய நிறுவனங்களின் செயற்பாடுகள் திருப்திதரவில்லை என திணைக்கள அதிகாரிகளால் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மாவட்டத்தில் செயல்படாத நிலையில் இருக்கின்ற இந்துசமய நிறுவனங்களை முறைப்படி இயங்கச் செய்வதற்கான ஏற்பாடுகள் விரைவில் எடுக்கப்படுமென எதிர்பார்க்கப்படுகின்றன. (கு-16)

# ஜனாதிபதித் தேர்தலில் வழங்கிய உறுதி மொழிகளை நிறைவேற்றுவேன்

## ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ

(கொழும்பு)



ஜனாதிபதி மஹிந்தராஜபக்ஷ ஜனாதிபதித்தேர்தலில் தான் வழங்கிய உறுதிமொழிகளை நிறைவேற்றவிருப்பதாக தெரிவித்துள்ளார்.

எந்ததடைஏற்பட்டாலும்அனைத்து சவால்களையும் எதிர் கொண்டு நாட்டை மீட்டெடுக்க நடவடிக்கை எடுப்பதாகவும் ஜனாதிபதி குறிப்பிட்டுள்ளார்.

கேகாலையில் கடந்த செவ்வாய்க்கிழமை நடைபெற்ற கூட்டமொன்றில் உரையாற்றும்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

மஹிந்த சிந்தனையில் உறுதியளிக்கப்பட்ட விடயங்கள் தற்போது நிறைவேற்றப்பட்டு வருகின்றது. அத்துடன் அதிகாரத்தைக் கைப்பற்றி 4 மாதங்களுக்குள் சமாதானப் பேச்சுவார்த்தைகளையும் ஆரம்பிக்க முடிந்தது.

இதேவேளை, தேசிய பிரச்சினைக்கு தீர்வுகாணும் போது அனைத்து அரசியல் கட்சிகளும் ஒன்றிணைய வேண்டும்.

அதிகாரத்திலுள்ள தலைவர் மிது குற்றம் சுமத்தி ஊர்வலம் செல்வது முக்கியமல்ல என்று தெரிவித்த அவர் இந்த நடவடிக்கையானது அரசியல் நோக்கம் கொண்டது எனவும் தெரிவித்துள்ளார். (க-9)

# இலங்கை அரசியல் யாப்பு சபைக்கு ஜே.வி.பி பரிந்துரைக்கும் உறுப்பினரை நியமிக்கக் கூடாது

## ஐ.தே.க வலியுறுத்தல்

(கொழும்பு)

இலங்கையின் அரசியல் யாப்பு சபைக்கு ஜே.வி.பி.பரிந்துரைக்கும் உறுப்பினரை நியமிக்கக் கூடாது என்று ஐக்கிய தேசியக் கட்சி வலியுறுத்தியுள்ளது.

நாடாளுமன்றத்தில் அவசர கால நிலையை நீடிக்கும் பிரேரணை மீதான விவாதத்தில் ஐக்கிய தேசியக்கட்சி உறுப்பினர் ராஜித சேனாரட்ண உரையாற்றுகையில்,

அரசாங்கத்தில் உள்ள மிகப் பலம்மிக்க கட்சி ஜே.வி.பி.என்று அதன் செயலாளர் ரில்வின் சில்வா கூறியுள்ளார் என்றும், அரசாங்கத்தின் ஓர் அங்கத்துவமாக தாங்கள் இருப்பதால், தமக்கு வாக்களித்தால்அரசுஅழுத்தம்கொடுத்து மக்கள் நலத் திட்டங்களை செயற்படுத்த முடியுமென்றும் ஜே.வி.பியினர் வாக்காளர்களிடம் தெரிவிக்கின்றனர் என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

அரசாங்கத்தில் இணைந்திருப்பதாகக் கூறுகின்ற ஜே.வி.பி நாடாளுமன்ற விவகாரங்களின் போது மட்டும் சுயாதீன எதிர்க் கட்சி என்கின்றது. அரசாங்கமாகவும். எதிர்க்கட்சியாகவும்ஜே.வி.பி. செயற்பாடுவதாக கூறுவதை அனுமதிக்க முடியாது.

இந்த அடிப்படையில் ஜே.வி. பி. சார்பில் அரசியல் யாப்பு சபைக்கு உறுப்பினரை பரிந்துரைக்கவும் முடியாது அது அடிப்படையற்றது என்றும் ராஜித சேனாரட்ண தொடர்ந்துபேசுகையில் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, ஜே.வி.பியின் பரிந்துரைக்கு ஏற்கனவே தமிழ்த் தேசிய கூட்டமைப்பும், முன்னாள் அமைச்சர் எஸ்.பி.திஸநாயக்கவும் எதிர்ப்பு தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (க-9)

# இன்று ஒரு தகவல்

## ஈகைக்குணம்

ஒரு ராஜாவைத் தேடி ஒருவர் வந்தார். "வாருங்கள்! என்ன விஷயம்?" என்றார் ராஜா. "எனக்கு மிகவும் பசிக்கிறது என்றார் வந்தவர். "அதனால் என்ன இங்கே எல்லா வகையான உணவும் இருக்கிறது. உங்களுக்கு எந்த வகையான உணவு வேண்டும்?" என்றார் ராஜா. "எனக்கு மாமிச உணவு சாப்பிட வேண்டு மென்று ஆசையாக இருக்கிறது. அதனால் அதுபோன்ற உணவு கிடைத்தால் நல்லது" என்றார். "அதுபோன்ற உணவே கிடைக்கும்படி செய்கிறேன். தங்களுக்கு எந்த மிருகத்தின் மாமிசம் வேண்டும்?" என்று கேட்டார். "எனக்கு இன்று நர மாமிசம் சாப்பிடவேண்டும் போல் ஆசையாக இருக்கிறது. அதனால் இன்று மனித மாமிசம் கிடைத்தால் பரவாயில்லை" என்றார்.

அந்த ராஜா இதைக் கேட்டதும் கொஞ்சம் கூட யோசிக்கவே இல்லை. "அப்படியே செய்கிறேன் கொஞ்சம் இப்படி உட்கா ருங்கள்" என்று சொல்லிவிட்டு அரண்மனைக்குள் போனார் ராஜா. அங்கே அந்த ராஜாவின் மகன் உட்கார்ந்திருந்தான். அவனைப் பார்த்து "மகனே வந்திருப்பவர் நர மாமிசம் கேட் கிறார்" என்றார். அவ்வளவுதான் அந்தப் பிள்ளையாண்டான் என்ன செய்தான் தெரியுமா? கொஞ்சம் கூட யோசிக்கவில்லை. தயங்கவில்லை. "அதனால் என்னப்பா...! என்னையே வெட்டி அவருக்குக் கொடுத்துவிடுங்கள்" என்று கூறிவிட்டான்.

உடனே அந்த ராஜா அதேபோல் செய்து ஒரு தங்கத் தட்டில் வைத்து அதைக் கொண்டு போய் உட்கார்ந்திருந்தவரின் முன்பு வைத்தார். உடனே என்ன நடந்ததாம். மகனையும் உயிர் பிழைக்க வைத்துவிட்டார். அப்படிச் செய்துவிட்டு ஆண்டவன் போய்விட்டார். அதன்பின் அமைச்சர்கள் ராஜாவிடம் வந்தார்கள். "அரசே.. இப்படி தானம் செய்கிறீர்களே! யார் எதைக் கேட் டாலும் கொடுத்துவிடுகிறீர்களே...எதற்காக இப்படிச் செய்கி றீர்கள்? என்ன பலன் கருதி இப்படி தானம் செய்கிறீர்கள்? எந்தப் புண்ணிய உலகத்தை அடைவதற்காக் இப்படிச் செய்கிறீர்கள்?" என்று கேட்டார்கள்.

அதற்கு அந்த ராஜா சொன்னார்."நான் எந்தப் பலனைக் கருதியும் தானம் செய்யவில்லை... தானம் செய்வது என்பது எனது சுபாவம். தானம் கொடுத்தால்தான் எனக்கு மகிழ்ச் சியும் மனநிம்மதியும் ஏற்படும்.எப்படி பொருள் மீது ஆசையுள்ள வர்கள் அது கிடைக்காவிட்டால் மனநிம்மதி இழக்கிறார் களோ... அதுபோல் தானம் கொடுக்காவிட்டால் நான் மன நிம்ம தியை இழந்துவிடுவேன். இது என்னுடைய கெட்ட குணம் என்று வைத்துக்கொண்டாலும் சரி" என்றார்.

இந்தக் கதையைக் கேட்டதும் நமக்கு என்ன தோன்றும். இது நடைமுறைக்கு சாத்தியமான விடயமா? என்ற சந்தேகம் தான் வரும். வந்தவன் சாப்பாடு கேட்டான் என்பதற்காக தன் மகனையே வெட்டிக் கொடுப்பது வேடிக்கையாக இருக்கிறது. இந்தக் காலத்தில் விஷயம் அது இல்லை. எதையும் எதிர்பா ராமல் செய்யும் ஈகைக் குணம் இருக்கிறது பாருங்கள்... அப்படி ஒரு சிறந்த மனப்பான்மை எப்படிப்பட்டது என்பதை நமக்குப் புரிய வைப்பதற்காகத்தான் இந்தக் கதை.

நிஷ்காமிய யோகம் என்று சொல்கிறார்களே... இதுதான். அதாவது பிரதிபலன் கருதாது காரியம் செய்தல். அதுசரி இந்தக் கதையில் வந்த ராஜா யார் தெரியுமா? அவர்தான் சிபிச்சக் கரவர்த்தி! புறாவைக் காப்பாற்றுவதற்காக தன்னையே வேட னுக்குக் கொடுத்தாரே அந்தச் சிபிச்சக்கரவர்த்திதான். இந்தக் காலத்திலெல்லாம் அப்படிப்பட்ட நிஷ்காமிய யோக மனப்பான் மையுடன் யார் இருக்கிறார்கள்.

இந்தக் காலத்தில் ராஜாக்கள் இருந்தால் எப்படி நடக்கும் தெரியுமா? இப்படித்தான் நடக்கும். ஒரு ராஜா இன்னொரு நாட்டுக்கு சமாதானப் புறாவை தூதனுப்பினார். அப்படி அனுப்பிய அடுத்த வாரமே அந்த நாட்டுடன் சண்டை போடுவதற்கு படை வீரர்களை அழைத்துக்கொண்டு புறப்பட்டார். "என்ன இது... சமாதானப் புறாவையும் தூதனுப்பி விட்டு சண்டை போடுவ தற்கும் கிளம்பிவிட்டீர்களே" என்று கேட்டார்களாம்.

"அட நீங்கள் வேறு... சமாதானத்திற்காக அனுப்பிய புறா வையும் அந்த ஆள் சமைத்துச் சாப்பிட்டுவிட்டான். அதற் காகத்தான் இந்தப் போர்" என்றார்.

-தென்கச்சி கோ. சுவாமிநாதன்

# நிரந்தர கொள்கையற்ற ஜே.வி.பி

ஜே.வி.பியினருக்கு நிரந்தர கொள்கை என்று ஒன்றில்லை என்று எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு அரசியல் பங்காளிகளாக இருந்து கொண்டே ஜே.வி.பியினர் நேரடியே அரசாங்கத்தை வெளியேறுமாறு கூறு வதை அவர் சுட்டிக்காட்டினார்.

வட மத்திய மாகாணத்தில் ஐக்கிய தேசியக் கட்சி சார்பில் உள்ளூராட்சி சபைத் தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்களை நேற்று முன்தினம் சந்தித்த போதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

எதிர்காலத்தில் அமையவிருக்கும் ஐக்கிய தேசியக் கட்சியின் அரசாங் கத்தின் கீழ் உள்ளூராட்சி சபை வேட்பாளர்களுக்கு பாரிய பொறுப்பு வழங்கப்படவிருப்பதாகவும் அவர் தெரிவித்துள்ளார். (து-9)

# திருகோணமலை, அம்பாறை மாவட்டங்களிலும் உள்ளூராட்சித் தேர்தலை ஒத்திவைக்கவேண்டும்

## திருமலை தமிழ் மக்கள் பேரவை அறிக்கை

(திருகோணமலை)

திருகோணமலை மற்றும் அம்பாறை மாவட்டங் களில் உள்ளூராட்சி சபைத் தேர்தலை ஒத்திவைக் காதது நயவஞ்சக நோக்கம் கொண்டது என்று திருகோணமலை தமிழ் மக்கள் பேரவை கண்டனம் தெரிவித்துள்ளது.

இதுதொடர்பாக தேர்தல் ஆணையாளருக்கு திரு மலைதமிழ்மக்கள் பேரவையின் தலைவர் த.விக்னேஸ் வரன் அனுப்பியுள்ள கடிதத்தில்,

வடகிழக்கு மாகாணத்தில் உள்ள உள்ளூராட்சி மன்றங்களுக்கான தேர்தலைப் பிற்போடுமாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்புநாடாளுமன்ற உறுப்பினர்களும், அமைப்புக்களும் பல முறை தங்களைக் கேட்டி ருந்தன.

இது தொடர்பான முடிவினை அறிவிக்கும் போது, வடக்கு-கிழக்கு மாகாணத்தில் திருகோணமலை, அம்பாறை மாவட்டங்கள் தவிர்ந்த ஏனைய இடங் களில் தேர்தலை ஒத்திவைப்பதாகவும் இந்த இரண்டு மாவட்டங்களிலும் தேர்தல் நடைபெறும் எனவும் அறிவித்துள்ளீர்கள்.

தாங்கள் எடுத்துள்ள இந்த முடிவானது ஜனநாயக விரோதமானதும், பாரபட்சமானதும் எனத் தங்க ளுக்கு சுட்டிக்காட்டுகின்றோம்.திருகோணமலை மாவட் டத்தில் குறிப்பாக மூதூர் பிரதேசத்தில் கடற்படை சமா தான ஒப்பந்தத்தை மீறும் வகையில் தொடர்ந்து தாக் குதல்களை நடத்துகின்றது.

அரச படைகளும் அவர்களுடன் சேர்ந்திருக்கும் துணை இராணுவக் குழுவினரும் அவசரகால நிலை யைப் பயன்படுத்தி வீடுகளுக்குள் அத்துமீறி புகுந்து சோதனை நடவடிக்கைகளில் ஈடுபட்டுக் கொண்டிருக் கின்றனர். அரசின் புலனாய்வும், படைத் துறையும் தமிழ் மக்கள் மீது அச்சுறுத்தல்களை விடுத்து வரு கின்றன.

வேட்பாளர் எவரும் சுதந்திரமாக பிரசாரம் செய்ய முடியாத மிகவும் மோசமான சூழ்நிலை ஏற்பட் டுள்ளது. அம்பாறை மாவட்டத்தில் அரச படைக ளுடன் இணைந்து இயங்கும் துணை இராணுவக் குழுவினர் ஆட்கடத்தல்களிலும், தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு எதிரான தாக்குதல்களிலும் ஈடுபட்டுக் கொண்டிருக்கின்றனர்.

இந்நிலையில் இந்த மாவட்டங்களில் சுதந்திர மான தேர்தல் ஒன்றை நடாத்த முடியாது. தாங்கள் இந்த மாவட்டங்களில் தேர்தலை நடாத்துவதற்கு எடுத்த முடிவு தவறானது. இந்த இரண்டு மாவட்டங் களிலுள்ள தெரிவத்தாட்சி அதிகாரிகளான அரசாங்க அதிபர்கள் இருவரும் தங்களுக்கு சரியான தகவல் களை வழங்கவில்லை என எண்ணுகின்றோம்.

பேரினவாத சிந்தனையின் அடிப்படையிலும் வடக்கு-கிழக்கை பிரிக்க வேண்டும் என்ற நயவஞ்சக நோக்குடனுமே செயற்பட்டுள்ளனர் எனக் குற்றம் சாட்டுகின்றோம்.

எனவே, ஜனநாயகத்தின் பாதுகாவலன் என்னும் உச்சப் பொறுப்பில் உள்ள தாங்கள் யதார்த்தத்தைப் புரிந்துகொண்டு இந்த இரண்டு மாவட்ட தேர்தல் களையும் ஏனைய வடக்கு-கிழக்கு தேர்தலைப் போல் ஒத்திவைக்கவேண்டும் என்று தாழ்மையுடன் கேட்டுக் கொள்கின்றோம்.

தாங்கள் எடுத்துள்ள முடிவை மாற்றாது போனால், தேவையற்ற பிரச்சினைகளை உருவாக்கி சமாதானச் சூழல் அறவே இல்லாது போய்விடும் என்று சமாதா னத்தை விரும்புகின்ற நாம் தங்களுக்குத் தெரிவிக்க விரும்புகின்றோம்.

மக்களே சுதந்திரமாக நடமாட முடியாத போது சுதந் திரமாக வாக்களிக்கமுடியுமா? என்பதனைத் தெளி வாகச் சிந்தித்து, சரியான முடிவை எடுப்பீர்கள் என எண்ணுகின்றோம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (த)

# 24 வீதிகளைத் திருத்தத் திட்டம்

(நல்லூர்)

வேலணைப் பிரதேச செயலர் பிரிவில் உலக உணவுத் திட்ட முன்னுரிமை வேலைகளில் வேல ணையில் 6 வீதிகளும் புங்குடுதீவில் 3 வீதிகளும் சரவணையில் 4 வீதிகளும் மண்டைதீவில் 5 வீதிகளும் அல்லைப்பிட்டியில் 6 வீதிகளும் இடம்பெறவுள்ளதாக கடந்த மாதம் வேலணைப் பிரதேச செயலர் பிரிவில் நடந்த பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (து-134)

# சிக்கன கடன் கூட்டுறவு நலன்புரிச் சங்கம் புனரமைப்பு

(நல்லூர்)

யாழ்.பிரதம தபாலகத்தில் கடந்த நான்கு ஆண்டு களுக்கு மேல் செயல்படாமலும் பொதுக்கூட்டங்கள் நடத்தாமலும் செயலிழந்திருந்த சிக்கனக் கடன் கூட்டு றவு நலன்புரிச் சங்கத்தை மீண்டும் செயல்பட வைப் பதற்கு வடபிரதேச பிரதி அஞ்சல் மா அதிபர் நாயகம் நடவடிக்கை எடுத்துள்ளார்.

இது சம்பந்தமாக பிரதி அஞ்சல் மா அதிபர் சங்கத் தினால் அங்கத்தவர்களுக்கான கலந்துரையாடல் ஒன்றை நடாத்தி, கடந்த காலங்களுக்கான சங்கம் சம்பந்தமான கணக்காய்வுகளை சம்பந்தப்பட்ட நிறுவ னத்தோடுதொடர்பு கொண்டுமேற்கொள்வதாக உறுதிய ளித்ததைத் தொடர்ந்து விரைவில் சங்கம் புனரமைப்பு செய்யப்பட்டு புதிய நிர்வாகிகளைத் தெரிவு செய்து இயங்கவுள்ளதாகத் தெரியவருகிறது.

இதன்மூலம், சங்கத்தில் அங்கத்தவராக இருந்து ஓய்வுபெற்றவர்களும், அங்கத்தவர்களும் தங்க ளுக்கு இவ்வளவு காலமும் இருந்து வந்த நிதி தொடர் பான கஷ்டங்களைத் தீர்த்துக் கொள்ள முடியுமென தெரியவருகிறது. (து-134)

# கிராம மக்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்த புதிய செயற்திட்டம்

(கொழும்பு)

வறுமைக்கோட்டின் கீழ் வாழும் கிராம மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதற்கு விசேட செயற் திட்டமொன்று அமுல்செய்யப்படவிருப்பதாக தபால் தொலைத்தொடர்பு மற்றும் கிராமியப் பொருளாதார அமைச்சருமான டி.எம். ஜெயரட்ண தெரிவித்துள் ளார்.

கிராமங்களில் வாழும் வறிய மக்களின் பொரு ளாதார நிலையை மேம்படுத்துவதை குறிக்கோ ளாகக் கொண்டே இந்தத் திட்டம் செயற்படுத்தப்பட வுள்ளது.

இந்தத் திட்டத்தின் கீழ் தெரிவு செய்யப்படும் குடும் பங்களுக்கு அடிப்படை வசதிகளை ஏற்படுத்திக் கொடுத்தல், வீடுகளை அமைத்துக் கொடுத்தல் போன்ற நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவுள்ளதா கவும் அமைச்சர் குறிப்பிட்டுள்ளார்.

வறுமைக்கோட்டின் கீழ் வாழும் குடும்பங்களுக்கு சுயதொழிலை மேற்கொள்வதற்கான சகல வசதி களும் செய்து கொடுக்கப்படுமென்றும் அமைச்சர் மேலும் தெரிவித்துள்ளார். (த-9)

# சிறுவர் முன்னேற்றத்தில் சமூகத்தின் பங்கு

(சாவகச்சேரி)

இன்றைய சிறார்களே நாளைய தலைவர்கள் அவர்களுக்கு எதிர்காலத்தில் நாட்டை நல்ல நிலைக் குக் கொண்டு சென்று நிர்வகிக்கக் கூடிய ஆற்றலை யும், அறிவையும் பெற்றுக் கொடுக்கும் பொறுப்பு சமுதாயத்தில் உள்ள அனைவருக்கும் உண்டு. அவர் களது அறிவைப் பெருக்குவதற்காக எமது சபை பெரும் செலவில் இந்த நூலகத்தில் சிறுவர் பகுதியை தனியாக ஆரம்பித்துள்ளது. அதை சிறுவர்கள் பயன் படுத்துவதற்கு பெற்றோரும், ஆசிரியர்களும் ஊக்கம் அளித்துச் செயல்படுத்த வேண்டும் என்று சாவகச்சேரி நகரசபைச் செயலாளர் திருமதி ஆறுமுகம் தெரிவித் தார்.அண்மையில் சாவகச்சேரி பொது நூலகத் துடன் இணைந்திருந்த சிறுவர் பகுதியை தனிப் பிரிவாக ஆரம்பித்து வைத்த பின் கருத்துத் தெரிவிக்கையி லேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

பாடசாலைச் சிறுவர்கள், பாலர் ஆசிரியர்கள், பெற்றோர் மேற்படி நிகழ்வில் பங்குபற்றியதுடன் பல சிறுவர்கள் சிறுவர் பகுதியில் அங்கத்தவர்களாகச் சேர்ந்து கொள்வதற்கான விண்ணப்பப் படிவங்களைப் பெற்று அங்கத்தவராகினர். (து-29)

# சந்திப்பும் ஒன்றுகூடலும்

'சலன சித்திரம்' அமைப்பின் பிரதேச நிர்வா கிகள் சந்திப்பும் பிரதேச திரைக்கலைச் சங்கங்களின் ஒன்று கூடலும் நாளை பிற்பகல் 3.30 மணிக்கு ஆரிய குளத்துக்கண்மையில் அமைந்துள்ள தமிழ் எழுத் தாளர் ஒன்றியத்தில் 'சலனசித்திரம்' அமைப்பின் யாழ்ப்பாண மாவட்ட அமைப்பாளர் எம்.ஷாந்தன் சத்தியகீர்த்தி தலைமையில் நடைபெறவுள்ளது.

யாழ்ப்பாண திரைக்கலைச் சமூகம் ஒன்றினை உருவாக்குதல் தொடர்பாகவும் வேறு பல முக்கிய விடயங்கள் தொடர்பாகவும் இச் சந்திப்பில் ஆராயப் படவிருப்பதால் சலனசித்திரம் உறுப்பினர்களையும் இலங்கை தேசிய திரைப்படக் கூட்டுத்தாபனத்தால் உருவாக்கப்பட்ட பிரதேச செயலக திரைக்கலைச் சங்க அங்கத்தவர்களையும் கலந்துகொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது. (து)

# புராண படனப் போட்டி

அகில இலங்கை சைவப் புலவர் சங்கம் 10, 11, 12,13 ஆம் தர மாணவர்களிடையே நடாத்தும் புராண படனப் போட்டி எதிர்வரும் ஏப்ரல் மாதம் 9ஆம் திகதி காலை 9மணிக்கு வண்ணை நாவலர் மகாவித்தி யாலயத்தில் நடாத்தப்படவுள்ளது.

ஆண்களுக்கு வேறாகவும், பெண்களுக்கு வேறா கவும் நடைபெறும் இப் போட்டியில் ஒவ்வொரு பாட சாலையிலுமிருந்து ஆண்களில் இருவரும், பெண் களில் இருவரும் மட்டுமே கலந்துகொள்ளலாம்.

புராணபடனப் பகுதி தரம் 10 சைவ சமயநெறி பெரிய புராணப் பாடல் 1-11 வரை கலந்துகொள்வோரது முழுப் பெயர், தரம், பிறந்த திகதி முதலிய விபரங்களைக் கொண்ட விண்ணப்பங்கள் பாடசாலை அதிபரால் உறுதிப்படுத்தப்பட்டு பதவி முத்திரையிடப்பட்டு, 1.4. 2006 ஆம் திகதிக்கு முன் சைவப் புலவர் செ.கந்த சத்தியதாசன், சைவப் பிரசார அமைச்சர், முருகன்திடல், புத்தூர் கிழக்கு, புத்தூர் என்ற விலாசத்துக்கு அனுப்பி வைக்கப்படவேண்டும். (து)

# கிளிநொச்சியில் மக்கள் பயிற்சி

கிளிநொச்சியில் அண்மையில் நடைபெற்ற மக்களுக்கான இராணுவப் பயிற்சி குறித்து கொழும்பு வார ஏடான ''த மோர்னிங்க் லீடர்'' பதிவு செய்துள்ளது.

அவ்வார ஏட்டில் இது தொடர்பில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது,

கிளிநொச்சியில் பொது மைதானம் அருகே நீண்ட வரிசை நிற்கிறது. எவரும் முறைப்பாடு செய்யவில்லை. ஒவ்வொருவரும் உள்ளே நுழைவதை ஆவலோடு எதிர்பார்த்துக்கொண்டிருக்கின்றனர்.

பெண்கள் குழந்தைகளை சுமந்துகொண்டு வரிசைகளில் இணைய விரைகின்றனர். அந்த நுழைவாயிலில் ஆண்கள் ஆயுதங்களுடன் நின்றுகொண்டு கூட்டத்தை ஒழுங்குசெய்கின்றனர். மூன்று மணியோசை கேட்ட பின்னர் பொது மைதானத்தில் அந்தக் கூட்டம் உள் நுழைந்து ஒருவர் பின் ஒருவராக ஒரு பயிற்சிக்கான தோற்றத்தோடு நிற்கின்றனர்.



## கொழும்பு ஊடகத்தின் பார்வை

கொழும்பு பொது மைதானம் போல் பதாதைகளும் உணவுக் கடைகளும் நிறைந்து காணப்படவில்லை. 'கண்ணிவெடிகள் எச்சரிக்கை' என்பதை தவிர வேறு எதுவும் அந்த மைதானத்தில் தொங்க விடப்படவில்லை.

தங்கள் வருகையைப் பதிவுசெய்யும் விதமாக கையெழுத்திடுகின்றனர். அதன் பின்னர் அவர்கள் வகைப்படுத்தப்பட்டு நிற்க வைக்கப்படுகின்றனர். இது திரைப்பட நடனத்துக்காக அல்ல-விடுதலைப்புலிகளைப் போல் உயிராபத்து விளைவிக்கக்கூடிய ஆயுதங்களைக் கையாள்வதற்காக. கிளிநொச்சியில் அடிப்படை இராணுவப் பயிற்சி பெறுவதற்காகவே இம்மக்கள் கூடியிருந்தனர்.

அங்கு மக்களை கவர்ந்திழுக்கும் எதுவித விளம்பர முழக்கங்கள் இல்லை. இந்த அனுபவத்தினூடே தாங்



கள் பெறப்போவது என்ன என்பதை பற்றி அவர்கள் அறிந்திருக்கவில்லை. இந்த இரண்டு மணிநேர பயிற்சி தொடர்பாக நண்பர்களும் உறவினர்களும் சொல்லித்தான் அவர்கள் கேள்விப்பட்டிருக்கின்றனர்.

'இந்தப் பயிற்சியில் கலந்துகொள்வதற்காக நாங்கள் கட்டாயப்படுத்தப்படவில்லை. இந்த மக்கள் பயிற்சியில் நாங்களாகவே இணைந்திருக்கிறோம்' என்கிறார் 22 வயது கே.நடேசன். நடேசனும் அவரது நண்பர்களும் தற்காப்புப் பயிற்சியில் பங்கேற்றுள்ளனர். 60 வீதமான மக்களுக்கு மீண்டும் ஒரு யுத்தம் தொடர்பான அச்சம்



இருந்தபோதும் அவர்கள் அதை எதிர்கொள்ள தயாராகியுள்ளனர்.

தற்போதைய சூழ்நிலையில் எதுவும் நடக்கலாம். ஜெனீவா பேச்சுக்களின் தொடக்கத்தில் சாதகமான நிலைமை இருந்தபோதும் இப்போது மீண்டும் நிச்சயமற்ற நிலைமை ஏற்பட்டுள்ளது 'என்கிறார் டி.ஜெர்ரி'.

ஜெர்ரியும் அவரது மூன்று நண்பர்களும் கிளிநொச்சி பயிற்சிக்காக வந்துள்ளனர். முல்லைத்தீவு மற்றும் திருகோணமலையிலிருந்து மேலும் ஆறுபேர் பயிற்சிக்கு வந்திருந்தனர். இரு தசாப்த கால யுத்தத்துக்கு அப்பால் ஜெனீவா பேச்சுக்கள் மூலம் அமைதி வழித்தீர்வு ஏற்படும் என்ற நம்பிக்கை இருந்தபோதும் அண்மைய பதற்றங்களால் வன்னி மண்ணில் அந்த நம்பிக்கை இப் போது இல்லை.



''வடக்கு-கிழக்கின் அனைத்து மக்களையும் இந்த இராணுவப் பயிற்சி ஆர்வம் கொள்ளவைத்துள்ளது. கிளிநொச்சியில் மட்டும் பாரிய அளவிலான மக்கள் பங்கேற்றுள்ளனர்'' என்றார் ஜெர்ரி. இந்தப் பயிற்சி தொடக்கத்தில் வாரத்துக்கு மூன்று நாட்கள் நடத்தப்பட்டாலும் பெருமளவிலான மக்களின் பங்கேற்பினால் ஐந்து நாட்கள் நடத்தப்படுகிறது.

பயிற்சியில் கலந்துகொண்டிருந்த மக்களின் எண்ணிக்கையைப் பார்க்கும்போது ஆண்களை விட பெண்கள் பெருமளவில் பயிற்சியில் ஆர்வம் காட்டுகின்றனர். இந்தப் பயிற்சிகளில் முதலில் இளைஞர்கள் ஆர்வம் காட்டியிருந்த போதும் இப்போது வயது எல்லையைத் தாண்டி 50 வயதிற்கு மேற்பட்ட வர்களும் பயிற்சியில் ஈடுபடுகின்றனர். நாட்டினது நிச்சயமற்ற அரசியல் சூழ்நிலையால் ஒரு புதிய யுத்தத்திற்கு நாங்கள் தயாராகிக்கொள்ள வேண்டியுள்ளது. ஆகையால்தான் பெண்களும் இப்பயிற்சிகளில் பங்கேற்கின்றனர் என்கிறார் பவித்ரா.

ஜெனீவா பேச்சுக்களின் தொடக்கமானது நாட்டை போரின் பாதையிலிருந்து விலக்கியதாக அம் மக்கள் கருதினர். ஆனால் தற்போதைய தென்னிலங்கை அரசியல் சூழ்நிலைகளால் இரண்டாம் சுற்றுப்பேச்சுக்கள் தோல்வியடைந்துவிடும் என்று கருதுகின்றனர்.

எதிர்வரும் ஏப்ரல் புத்தாண்டானது அமைதியான சூழ்நிலையில் கொண்டாடப்படுமா அல்லது நாடு மீண்டும் யுத்தத்திற்கு செல்லுமா என்ற நிச்சயமற்ற நிலையில் அவர்கள் உள்ளனர்.

அமைதிப்பேச்சுக்களுக்கான விவாதம் என்ற பெயரில் பல முறை ஏமாற்றப்பட்ட கோபம் அம்மக்களிடத்தில் உள்ளது. இருந்தபோதும் அவர்களது வாழ்வில் வருகின்ற எல்லா சாவல்களுக்கும் முகம் கொடுக்கவே அவர்கள் தயாராகிவிட்டனர்.

நாங்கள் சிங்கள அரசாங்கங்களால் தொடர்ந்து ஏமாற்றப்பட்டிருக்கிறோம். நான் எதனையும் எதிர்பார்க்கவில்லை அவர்கள் மீண்டும் மீண்டும் ஏமாற்றாமல் இருக்க வேண்டும்.

பெரும்பான்மையான தமிழர்களின் கருத்து இதுதான். இந்த நாட்டின் பிறமக்களை விட நாங்கள் முகம் கொடுக்கும் பிரச்சினைகள் அதிகம். இப்போது எதையும் எதிர் கொள்ள



நாங்கள் தயாராக உள்ளோம். ஆகையால் நாங்கள் அனைவருமே இத்தகைய தற்காப்புப் பயிற்சியில் ஈடுபடுகிறோம். என்கிறார் ஜி.அனுசா .

இலங்கையின் இதர பகுதி மக்களை நடத்தும் தன்மையைவிட வடக்கு – கிழக்கு மக்கள் பாரபட்சமாக ஒடுக்கப்படுவது குறித்து அம்மக்கள் கடும் கோபத்தில்தான் உள்ளனர். எந்த ஒரு மோசமான நிலையையும் எதிர்பார்த்திருக்கிறார்கள் அவர்கள். ஆனால் எமது வாழ்க்கையை தென்னிலங்கை மக்கள் தீர்மானிக்க அனுமதிக்கமுடியாது .

நாங்கள் அமைதியை விரும்புகிறோம் . எமது உரிமைகளும் சுயநிர்ணய உரிமையும் எமக்கு அளிக்கப்பட வேண்டும். பேச்சுக்கள் வெற்றி பெறும் என்பதில் எமக்கு உறுதி யான நம்பிக்கை இல்லை. இருதரப்பிலும் பல ஆயிரக் கணக்கானோர் கொல்லப்பட்டுள்ளனர். நாங்கள் அத்தகைய நிலைமை மீளவும் ஏற்படுவதை நாம் விரும்பவில்லை. ஆனால் பேச்சுக்கள் தோற்றால் யுத்தத்தைத் தவிர வேறு வழியில்லை என்பதுதான் பலரது கருத்தாகவும் இருக்கிறது. அரசாங்கமும் விடுதலைப்புலிகளும் பேச்சுக்கள் மூலம் தீர்வு காண்பதற்கான ஒரு இறுதிச் சந்தர்ப்பமாகத்தான் அம்மக்கள் ஜெனீவா பேச்சுக்களைப் பார்க்கின்றனர்.

அந்த மக்களிடத்திலே நாளாந்தம் பதற்றம் அதிகரித்து வருகிறது. பயிற்சி பெறும் மக்களின் எண்ணிக்கையும் அதிகரித்து வருகிறது. இரவு நேரங்களில் அம்மக்கள் வீடுகளை விட்டு வெளியே வரத்தயங்குகின்றனர். இருட்டு நேரங்களிலும் நிசப்தமான இரவிலும்தான் குண்டு வெடிப்புகள் நடக்கின்றன .

அம்மக்கள் அச்சத்துடனே உறங்குகின்றனர். ஒரு புதிய நாள் வரும் என்ற நம்பிக்கையும் உண்டு. ஒருநாள் விழிக்கும்போது அமைதியான நாட்டை பார்ப்போம். அப்போது யுத்தம் என்பது நினைவுப்பதிவுகளாகவே இருக்கும் என்ற எண்ணத்தோடு அம்மக்கள் உறங்கின்றனர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

# அமெரிக்க விசா மோசடியில் தொடர்புடையவர் கைது!

(கொழும்பு)

விளையாட்டுத்துறை அமைச்சர் ஜீவன் குமாரதுங்க தொடர்புபட்டுள்ள அமெரிக்க விசா மோசடி வழக்கில் தேடப்பட்ட நபர் நைஜீரியாவில் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

இந்த மோசடியின் மூளையாக கடல் உணவு ஏற்றுமதியாளரான உபாலி கருணாரட்ண செயற்பட்டதாகக் பொலிஸார் கருதினர் .ஆகையால் அவரை நேற்று முன்தினம் நைஜீரியாவில் பொலிஸார் கைது செய்தனர்.

ஆனால் தனக்கும் இந்த மோசடிக்கும் எதுவித தொடர் பும் இல்லை என்றும் அமெரிக்காவின் நிறுவனம் ஒன்றில் 79பேருக்கு வேலைவாய்ப்பு இருந் தமையால் நைஜீரியாவின் குடியேற்ற ஆலோசகர் ஒருவரிடம் அப்பணி ஒப்படைக்கப்பட்டது என்றும் அவரே இந்த மோசடியில் ஈடுபட்டவர் என்றும் கூறினார்.

மோசடியில் தொடர்புடையவராகக் கருதப்படும் நைஜீரிய நபரும் கைதுசெய்யப்பட்டுள்ளார். அவர் இந்த மோசடியை ஒப்புக்கொண்டுள்ளார். அவரிடமிருந்து பெருமளவிலான அமெரிக்க டொலரும் பறிமுதல் செய்யப்பட்டுள்ளது.

இலங்கையிலிருந்து தான் நைஜீரியா வந்தது போலி கடவுச் சீட்டு மூலம் அல்ல உண்மையான கடவுச் சீட்டுமூலம்தான் என்பதை உறுதிப்படுத்தும் வகையில் கொழும்பு இரகசியப் பிரிவுப் பொலிஸாருக்கு அதன் நகல் அனுப்பி வைக்கப்பட்டுவிட்டதாகவும் உபாலி கருணாரட்ண கூறினார். (து)

## தவறான ஊசி ஏற்றியதால் 10 மாத குழந்தை பலி

தனியார் மருத்துவமனையில் தவறான ஊசிஏற்றியமையால் 10 மாத குழந்தை மரணமடைந்துள்ளது. நாகொலவைச் சேர்ந்த லக்சிதா பிரசாங்னி என்ற 10 மாத குழந்தை கடந்த புதன் கிழமையன்று காய்ச்சல் காரணமாக தனியார் மருத்துவமனைக்கு எடுத்துச்செல்லப்பட்டது.

மருத்துவமனையில் மருத்துவர் இல்லாத நிலையில் மருத்துவர் தொழில் செய்யாத அவரது கணவர் ஊசி ஒன்றை குழந்தைக்குச் செலுத்தியுள்ளார். இதனால் குழந்தை யின் உடல்நலம் மேலும் மோசமடைந்தது. அதன்பின்னர் மாத்தளை மருத்துவமனையில் அக்குழந்தை அனுமதிக்கப்பட்டது. இருப்பினும் சிகிச்சை பலனின்றி அக்குழந்தை இறந்தது. (து)

## பாராட்டு விழா

சங்கானைக் கல்விக் கோட்டத்தில் 2005ஆம் ஆண்டிற்கான தரம் 05 புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களுக்கும் 100இற்கு மேற்பட்ட புள்ளிகளைப் பெற்ற மாணவர்களுக்குமான பாராட்டுவிழா நாளை ஞாயிற்றுக் கிழமை முற்பகல் 9.00 மணிக்கு யா/ வட்டு மத்திய கல்லூரியில் சங்கானை கோட்டக்கல்விப் பணிப்பாளர் நா.சண்முக சுந்தரம் தலைமையில் நடைபெறவுள்ளது. (து-9)

# மகளிர் உலகம்

## தலைமுடி உதிர்வது ஏன்?



தலைமுடி நன்கு வளரவில்லை என்று கவலைப்படாத பெண்களே இவ்வுலகில் இல்லை என்று சொல்லலாம். நாம் சாப்பிடும் உணவு முறை சரிவிகிதமாக இல்லை எனில், தலைமுடி உதிர்தல் முதல் பல உபாதைகளை நாம் சந்திக்கிறோம்.

சாப்பிடும் உணவு முறை மட்டும் அல்ல உண்ணும் உணவு ச்ரியான முறையில் சமிபாடடைய வில்லை என்றாலும் உடல் சீர்கேடு அடைந்து விடும். எனவே, சமிபாடடைவதற்கு வகை செய்யும் இஞ்சி, பூண்டு ஆகியவற்றை உணவில் சேர்த்துக் கொள்ளுங்கள்.

### முடிவளரத் தேவையான விற்றமின்கள்

விற்றமின் 'பி' வகைகள் அனைத்துமே முடி வளரத் தேவையானவை. இனோசிடோல், பயோட்டின், பி6, போலிக் அமிலம் ஆகியவை மிக மிக முக்கியம். இவை தவிர மக்னீஷியம்,



துத்தநாகம், சர்பர் ஆகிய தாது உப்புக்களும், நியாசின், விற்றமினும் அவசியம். பீன்ஸ், அவரை, துவரை, பட்டாணி, கரட், சோயா, உலர் பழங்கள், முட்டை ஆகியவற்றில் விற்றமின் 'பி' சத்து அதிகம் காணப்படுகிறது. இவை தவிர இரும்புச் சத்து விற்றமின் 'ஏ' மற்றும் சில வகை புரோட்டீன்களும் முடி வளர்ச்சிக்குக் காரண மாக அமைகின்றன.

பயோட்டின் சத்து, சவ்வரிசி, பட்டாணி, சூரியகாந்தி விதை, சோயா ஆகியவற்றில் அதிக மாய் காணப்படுகிறது.

கீரை வகைகள், அரிசிக் குருணை, சவ்வரிசி, முட்டை ஆகியவற்றில் அதிக இரும்புச் சத்துக் காணப்படும். இவை முடி வளர்ச்சிக்கு நல்லவை.

விற்றமின் 'ஏ' சத்து முடி வளர்ச்சிக்குத் தேவைதான் என்றாலும், அளவுக்கதிகமாகச் சாப்பிட்டால் தலை முடி உதிரத் தொடங்கும். கரட்டில் விற்றமின் 'ஏ' சத்து அதிகம் உள்ளது.

அளவுக்கதிகமான புரோட்டீன் சத்தும் தலை முடி உதிரக் காரணமாக அமைகிறது. சோய பீன்ஸ், முட்டை, பருப்பு வகைகள், தயிர் ஆகியவை முடி வளர்ச்சிக்கு உகந்த புரோட்டீன்கள்.

முடியின் வேர்க்கால்களை உறுதிப்படுத்த விற்றமின் 'இ' சத்து அவசியம். மீன் எண்ணெய், உலர் பழங்களில் விற்றமின் 'இ'சத்து அதிகம் உள்ளது.

இவைதவிர, உருளைக்கிழக்கு, மஞ்சள், குடை மிளகாய், தானியங்கள் ஆகியவை துத்தநாகம் நிறைந்தவை. ஆதலால், அவற்றைச் சாப்பிடுவதும் நல்லது. முடி வளர்ச்சிக்குத் தேவையான அயோடின் சத்து, உப்பு, கடுகு, பூசணி விதை ஆகியவற்றில் கிடைக்கும்.

### முடி அதிகமாய் உதிர்வது ஏன்?

சத்துக்குறைபாடு, மன அழுத்தம் (பயம், டென்ஷன், கோபம், விரக்தி), ஹர்மோனீ குளறுபடி, மருந்து உட்கொள்ளுதல், சில நோய்கள் தண்ணீரில், உணவில்கலந்துள்ள உரங்களால் ஏற்படும் பாதிப்பு, செயற்கை முறையில் முடியை சீரமைத்தல் போன்றவற்றால் முடி அதிகமாய் உதிர்கிறது.

ஹார்மோன் மாற்றங்களும், மன அழுத்தம் காரணங்களாக அமைந்தாலும், சத்துக் குறைபாட்டால் முடி கொட்டுவது தான் மிக அதிக மக்களிடையே காணப்படுகிறது.

எனவே, சத்துள்ள உணவு உண்டால், வாரம் ஒரு கிரீமையும், கண்ட கண்ட ஷாம்பூக்களையும், எண்ணெயையும் தேடிப் போவதையும், காசைக் கரியாக்குவதையும் தவிர்க்கலாம்.

## சமைத்துச் சுவைப்போம்

### முட்டை அவியல்

**தேவையான பொருட்கள்:**



| | |
|---|---|
| உருளைக்கிழங்கு | - 1 |
| முருங்கைக்காய் | - 1 |
| முட்டை | - 2 |
| தேங்காய் | - பாதி அளவு |
| மிளகாய்த்தூள் | - 1 தேக்கரண்டி |
| சிறிய வெங்காயம் | - 100 கிராம் |
| பூண்டு | - 1 |
| மஞ்சள்தூள் | - சிறிதளவு |
| உப்பு | - தேவையானளவு |
| தே.எண்ணெய் | - 1 மேசைக்கரண்டி |
| கறிவேப்பிலை | - சிறிதளவு |

*செய்முறை:–*

முட்டையை வேகவைத்து ஓட்டை நீக்குங்கள். உருளைக் கிழங்கை சிறிதாக நறுக்கி வையுங்கள். தேங்காயைத் துருவுங்கள்.

முருங்கைக்காயை அளவாக வெட்டி, இரண்டாகப் பிளந்து வையுங்கள். அத்தோடு மஞ்சள் தூள், உருளைக்கிழங்கு சேர்த்து, அளவாகத் தண்ணீர் விட்டு வேகவையுங்கள்.

. தேங்காய், மிளகாய்த்தூள், வெங்காயம், பூண்டு ஆகியவைகளை அரைத்தெடுக்கவும். முக்கால் பக்குவத்திற்கு வெந்து வரும்போது, அரைத்து வைத்திருக்கும் கலவையை அத்தோடு சேர்த்து கிளறுங்கள். பாத்திரத்தில் பிடிக்காத அளவுக்கு கிளறி விடுங்கள். நன்றாக வெந்து கலவையுடன் சேர்ந்துவிட்டால் முட்டையை நறுக்கி அதில் சேருங்கள். லேசாக கிளறிவிட்டு இரண்டு நிமிடம் கழித்து இறக்கிவிடுங்கள். அதில் தே.எண்ணெயையும், கறிவேப்பிலையையும் கலந்து கிளறிவிட்டால் முட்டை அவியல் ரெடி.

## முகம் பொலிவு பெற...



ஒரு டேபிள் ஸ்பூன் சந்தனப் பொடி, பொடியைக் குழைக்கும் அளவுக்கு பால், இரண்டு சொட்டு எலுமிச்சைச்சாறு ஆகியவற்றைக் கலந்து முகம், கழுத்து முழுதும் பூசி அரைமணி நேரம் ஊறவிடுங்கள். பொறுக்கும் அளவு சுடுநீரில் முகத்தை மெதுவாகத் தேய்த்துக் கழுவினால், முகம் பளிச்சிடும்.

தேங்காய் எண்ணெயைக் கையில் ஊற்றி, இரண்டு சொட்டு ரோஸ்வாட்டர் ஊற்றி,நன்கு குழைக்க வேண்டும். குழைக்கும் போது எண்ணெய் நுரைத்து சற்று வெள்ளையாக மாறும். கைச் சூட்டுடன் இதை அப்படியே முகத்தில் தேய்த்து, பயத்தம் மா போட்டுத் தேய்த்துக்குளித்தால் முகம் மென்மையாவதுடன், நன்கு பொலிவு பெறும்.

## அழகின் பின்னால்...



அமெரிக்கர்கள் தங்களது அழகைப் பராமரிக்கச் செய்யும் செலவைக் கேட்டால் நமக்கு மயக்கம் வந்து விடும். அவர்களின் முக்கிய அழகுச் செலவுகளில் சில.

☞ அழகு சாதனங்களுக்காக ஒவ்வொரு ஆண்டும் 90 ஆயிரம் கோடி ரூபாய் செலவு செய்கிறார்கள்.

☞ உடல் அழகைப் பேணுவதற்க்காக மட்டும் அவர்கள் செய்யும் மருத்துவச் செலவு தொகை ஆண்டுக்கு ஆயிரத்து 400 கோடி ரூபாய்.

☞ டயட் கண்ட்ரோல் என்ற பெரியல் விசேஷ உணவுகளுக்காகச் செலவிடும் தொகை ஒரு லட்சத்து 50 ஆயிரம் கோடி ரூபாய்.

## நன்கு பசி எடுக்க...

ஏலக்காய் 2, சீரகம் ஒரு மேசைக்கரண்டி, மிளகு ஒரு மேசைக்கரண்டி, சுக்கு சிறிது எடுத்து வாணலியில் லேசாக வறுத்துப் பொடி செய்து வைத்துக்கொண்டால், பசியே இல்லாத நேரத்தில் சுடுநீரில் சிறிது சர்க்கரையுடன் இந்தப் பொடியைக் கலந்து குடிக்கலாம்.

அரைமணி நேரத்தில் கபகப வெனப் பசி எடுக்கும்.

## மற்றவர்களைப் பார்க்காதீர்கள்!



நம்மில் பெரும்பாலானோர் அடுத்தவர்கள் செய்வதைப் பார்த்து அப்படியே பின்பற்றுவதைப் பழக்கமாகக் கொண்டிருக்கிறோம்.

பக்கத்து வீட்டுக்காரர் ஒரு ஸ்கூட்டர் வாங்கினால், உடனே நமக்கும் ஒன்று வாங்க வேண்டும் என்று மனது அடித்துக்கொள்கிறது. அடுத்த வீட்டுப் பெண்மணி தங்க வளையல் வாங்கினால் எப்படியாவது அதேபோல ஒன்று நாமும் வாங்கிடவேண்டும் என்று துடியாய்த் துடிக்கிறோம். இப்படிப் பல விஷயங்களில் நாம் அடுத்த வர்களைப் பின் பற்றுகிறோம்.



அதாவது மற்றவர்கள் என்ன செய்கிறார்களோ, அதை அப்படியே செய்வதே நமக்குப் பிடிக்கிறது.

ஆனால் மற்றவர்களைப் பர்க்காமல், அடுத்தவர்கள் என்ன செய்கிறார்கள் என்பதை அறியாமல் வாழ்ந்தால் வாழ முடியுமா..?

அப்படி வாழ்ந்தால் 'உலகமே தெரியாதவர், நாகரீகம் அறியாதவர்' என்ற முத்திரை விழுகிறது. உண்மையில் மற்றவர்களைப் பார்த்து நம் வாழ்க்கையை அமைக்கும்போது நமக்கென்று ஒரு தனித்தன்மை இல்லாமல் போய்விடுகிறது. அல்லது இழந்து விடுகிறோம்.

100 மீற்றர் ஓட்டப் பந்தயத்தில் எல்லோரையும் முந்திக் கொண்டு ஓடுகிறவர் தனக்குப் பின்னே யார் வருகிறார்கள்? என்பதைக் காண்பதற்கு ஆசைப் பட்டால் என்னவாகும்...? விநாடிப் பொழுதில் அவரைப் பின் தொடர்ந்து வருபவர் வெற்றி பெற்றுவிடுவார். அதனால் முன்னால் ஓடிக் கொண்டிருப்பவர் அடுத்தவரைப் பற்றிக் கவ லைப்படாமல் ஓடிக்கொண்டேதான் இருக்க வேண்டும். அப்போதுதான் வெற்றியின் எல்லையைத் தொட முடியும்.

பிறரைப் பார்த்துக் கொண்டே இருப்பது எந்தவிதத்திலும் நமக்கு உதவாது. அதே நேரத்தில் அடுத்தவர்களின் வாழ்க்கையைப் பாடமாக எடுத்துக்கொள்வதில் தவறில்லை.

ஒரு மாணவன் நூற்றுக்கு 90 மதிப்பெண் வாங்குகிறான். இன்னொருவன் 60 மதிப்பெண் பெறுகிறான். 60 மதிப்பெண் வாங்குபவன் 90 வாங்குபவனைப் பார்த்து இவன் எப்படி இவ்வளவு எடுத்தான்?, அதற்காக எப்படி கஷ்டப்பட்டான்? என்பதைத் தெரிந்துகொள்வதில் தவறில்லை. அது முன்னேற்றத்தின் படிக்கட்டு. உழைக்கத் தூண்டும் எண்ணம். ஆக நன்மை தருபவை தவிர, மற்ற நேரங்களில் மற்றவர்களைப் பார்க்காமலிருப்பதே நல்லது.

## சமுர்த்தி முகாமையாளர் பதவி வெற்றிடங்களை நிரப்ப நடவடிக்கை

(கொழும்பு)

வடக்கு- கிழக்கு மாகாணம் உட்பட நாட்டின் சகல மாவட்டங்களிலும் தற்போது நிலவும் சமுர்த்தி முகாமையாளர் பதவி வெற்றிடங்களை நிரப்புவதற்கு சமுர்த்தி அதிகார சபை நடவடிக்கை எடுத்துள்ளது.

இதற்கமைய மாவட்ட செயலகங்கள், பிரதேச செயலகங்கள் மற்றும் சமுர்த்தி வங்கிகள் என்பவற்றுக்கு புதிதாக சமுர்த்தி முகாமையாளர்கள் நியமிக்கப்படவுள்ளதாக சமுர்த்தி அதிகாரசபையின் பணிப்பாளர் நாயகம் தெரிவித்துள்ளார்.

மட்டக்களப்பு, அம்பாறை, திருகோணமலை, வவுனியா, மன்னார், முல்லைத்தீவு, கிளிநொச்சி, அநுராதபுரம், பொலநறுவை, பதுளை, மொனறாகல, அம்பாந்தோட்டை, புத்தளம் ஆகிய 13 மாவட்டங்களிலேயே சமுர்த்தி முகாமையாளர்கள் வெற்றிடங்கள் காணப்படுகின்றன.

அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக் கழகமொன்றில் பட்டம் பெற்றுள்ள பட்டதாரிகள் சமுர்த்தி முகாமையாளர்களாக நியமிக்கப்படவுள்ளனர்.

பட்டதாரி பயிற்சித் திட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்ட 25 வயதிற்கும் 45 வயதிற்கும் இடைப்பட்ட பட்டதாரிகளுக்கு முன்னுரிமை அடிப்படையில் சமுர்த்தி முகாமையாளருக்கான நியமனங்கள் வழங்கப்படவுள்ளதாகவும் சமுர்த்தி அதிகாரசபை, பணிப்பாளர் நாயகம் தெரிவித்துள்ளார்.

பட்டதாரிகள் தமது விண்ணப்ப படிவங்களை எதிர்வரும் ஏப்ரல் மாதம் 10ஆம் திகதிக்கு முன்னர் பத்திரமுல்லவில் அமைந்துள்ள சமுர்த்தி அதிகாரசபை காரியாலயத்திற்கு பதிவுத்தபாலில் அனுப்பி வைக்குமாறும் பணிப்பாளர் நாயகம் கேட்டுக்கொண்டுள்ளார். (க-9)

## அரச ஊழியர்களின் ஊதிய முரண்பாடு; தீர்க்க உடன் நடவடிக்கை எடுக்குக!

### தேசிய தொழிற்சங்க மையம் அரசிற்கு அழுத்தம்

(கொழும்பு)

அரசாங்க ஊழியர்களின் ஊதிய முரண்பாட்டுப் பிரச்சினைகளை உடன் தீர்க்க நடவடிக்கை எடுக்குமாறு தேசிய தொழிற்சங்க மையம் அரசாங்கத்திற்கு அழுத்தம் கொடுத்துள்ளது.

புதிய ஊதிய ஆணைக்குழு சரியான முறையில் வழிநடத்தப்பட வேண்டுமென மையத்தின் உறுப்பினர் சம்மந்தக் கொரல ஆராய்ச்சி தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஊடகவியலாளர் மாநாட்டிலேயே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, திஸ்ஸதேவேந்திர தலைமையிலான அதிகாரிகள் நீதிமன்றத்தின் முன்நிறுத்தப்பட வேண்டுமென ஊழியர் மீளாய்வு தொழிற்சங்கக் குழு கூறியுள்ளது.

பொதுமக்களின் நம்பிக்கையை சிதைத்தல், பொறுப்புக்களை தவறவிட்டமை போன்ற குற்றச்சாட்டுக்கள் அவர்கள் மீது சுமத்தப்பட்டுள்ளதாக தொழிற்சங்கக் குழுவினர் தெரிவித்துள்ளனர்.

அரச ஊழியர்களின் ஊதியப் பிரச்சினைக்கு உரிய தீர்வு வழங்கப்படவில்லையெனில் உள்ளூராட்சி சபைத் தேர்தலில் தமது வாக்குகளை செல்லுபடியற்றதாக்கப் போவதாகவும் எச்சரித்துள்ளார்கள். (த-9)

## நேர்முகப் பரீட்சை

(கொழும்பு)

இளைஞர், யுவதிகளை வலுவூட்டும் யவுன் விரயத் திட்டத்தில் 40 ஆயிரம் பேரை இணைத்துக்கொள்வது தொடர்பான நேர்முகப் பரீட்சைகள் இன்று ஆரம்பமாகின்றன.

இந்தப் பரீட்சைகள் இன்று முதல் நாளை மறுதினம் வரை நாடு முழுவதிலும் அமைந்துள்ள 40 யவுன் விரய நிலையங்களில் நடைபெறும்.

இந்த நிலையங்களை மஹிந்த சிந்தனைக் கொள்கைப் பிரகடனத்தின் அடிப்படையில் ஆற்றல் அபிவிருத்தி மற்றும் தொழில் முயற்சி மறுசீராக்கல் அமைச்சு நிறுவியுள்ளது.

விண்ணப்பதாரிகளின் வசதி கருதி யாழ்ப்பாணம், திருகோணமலை, மட்டக்களப்பு, அம்பாறை, வவுனியா, முல்லைத்தீவு, கிளிநொச்சி, மாத்தறை, பதுளை, புத்தளம், களுத்துறை போன்ற நகரங்களில் இயங்கும் 17 பிரதேச செயலர் காரியாலயங்களிலும் நேர்முகப் பரீட்சை நடைபெறும். (த-7)

## 156 வன்முறைச் சம்பவங்கள் பதிவு

(கொழும்பு)

உள்ளூராட்சி சபைத் தேர்தலுடன் தொடர்புடைய 156 வன்முறைச் சம்பவங்கள் பதிவாகியுள்ளதாக தேர்தல் வன்முறைகள் கண்காணிப்பு நிலையம் தெரிவித்துள்ளது.

இவற்றில் கொலைச் சம்பவங்களும் அடங்குவதாக அந்த நிலையம் தெரிவித்துள்ளது. எனினும் கூடுதலாக தாக்குதல் சம்பவங்களே இடம்பெற்றுள்ளதாக அந்த நிலையத்தின் தேசிய இணைப்பாளர் டி.எம்.திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

இதேவேளை, கடந்த இரண்டு மாத காலத்திற்குள் 75 வீதமான பொலிஸ் இடமாற்றங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

தற்போதைய நிலைமை குறித்து தேர்தல் ஆணையாளரினதும் பொலிஸ்மா அதிபரினதும் கவனத்திற்கு கொண்டுவரப்படவிருப்பதாகவும் நிலையத்தின் தேசிய இணைப்பாளர் மேலும் தெரிவித்துள்ளார். (த-9)

## நடமாடும் சேவை

(யாழ்ப்பாணம்)

சுனாமியால் பரீட்சை சான்றிதழ்களை இழந்தவர்களுக்கு பெறுபேறு ஆவணங்களைத் துரிதமாகப் பெற்றுத்தரும் நடமாடும் சேவை எதிர்வரும் திங்கள், செவ்வாய்க்கிழமைகளில் யாழ்ப்பாணத்தில் நடைபெறும்.

இந்தச் சேவையை பரீட்சைகள் திணைக்களம் ஏற்பாடு செய்திருக்கின்றது.

இந்த நடமாடும் சேவை மன்னார் போன்ற பகுதிகளிலும் நடத்தப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

மஹிந்த சிந்தனை கொள்கைப் பிரகடனத்துக்கமைய மேற்கொள்ளப்படும் நடவடிக்கை இதுவாகும். (த-7)

## அன்பளிப்பு

(யாழ்ப்பாணம்)

கண்பார்வை குறைவுற்றநிலையில் இருந்த வறுமைக் கோட்டுக்குக் கீழ் வாழும் 150 பேருக்கு சாவகச்சேரி லயன்ஸ் கழகம் மூக்குக் கண்ணாடிகளை அன்பளிப்பாக வழங்கியுள்ளது.

சாவகச்சேரி லயன்ஸ் கழகத்தின் தலைவர் லயன் எஸ்.சிவபாலசுப்பிரமணியம் தலைமையில் டிறிபேக் கல்லூரியில் நடைபெற்ற நிகழ்விலேயே இலவச மூக்குக் கண்ணாடிகள் வழங்கப்பட்டன.

இந்நிகழ்வில் யாழ்.மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர் நடராஜா இரவிராஜ், மாவட்ட மட்ட நீரிழிவுத் திட்டத் தலைவர் லயன் வைத்திய கலாநிதி எஸ்.எஸ்.அருளானந்தம், சுனாமி செயல்திட்டத் தலைவர் லயன் எஸ்.கே. நவரத்தினம் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகப் பங்குகொண்டிருந்தனர். (த-16)

## கூட்டம்

(நல்லூர்)

நாயன்மார் கட்டு பாரதி மன்ற சனசமூக நிலைய மாதர் சங்கத்தின் விசேட பொதுக்கூட்டம் நாளை ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 4.30 மணிக்கு மாதர் சங்கத் தலைவி திருமதி சி.கனகரட்ணம் தலைமையில் நடைபெறவுள்ளது.

இக்கூட்டத்தில் மகளிருக்கான சுயதொழில் தையல் பயிற்சி மற்றும் மகளிர் அபிவிருத்தி திட்டங்கள் பற்றியும் கலந்துரையாடப்படவுள்ளன. இக்கூட்டத்தில் அரச சார்பற்ற நிறுவனங்களைச் சேர்ந்த பலர் கலந்துகொண்டு கருத்துரைகள் வழங்கவுள்ளனர். (க-134)

* * *

இலங்கைச் செஞ்சிலுவைச் சங்க யாழ்.மாவட்டக் கிளையின் ஆளுநர் சபைக் கூட்டம் இன்று சனிக்கிழமை முற்பகல் 10.00 மணிக்கு இலங்கைச் செஞ்சிலுவைச் சங்க யாழ்.மாவட்டக் கிளை மகாநாட்டு மண்டபத்தில் கிளையின் தலைவர் பேராசிரியர் வீ.கே. கணேசலிங்கம் தலைமையில் நடைபெறவுள்ளது.

எனவே அனைத்து ஆளுநர் சபை உறுப்பினர்களையும் கூட்டத்திற்கு தவறாது கலந்துகொள்ளுமாறு கிளையின் செயலாளர் எஸ்.செல்வக்குமரன் கேட்டுள்ளார். (க-134)

## வீடுகள் கையளிப்பு

திருகோணமலையில் ஜப்பான் நட்புறவு சங்கத்தின் உதவியுடன் 780 மில்லியன் ரூபா செலவில் கட்டப்பட்ட 246 வீடுகள் அமைச்சர் பேரியல் அஷ்ரப்பினால் இன்று சனிக்கிழமை மக்களிடம் கையளிக்கப்படவுள்ளது.

ஒவ்வொரு வீடுகளும் 10 இலட்சம் ரூபா செலவில் அமைக்கப்பட்டுள்ளது. வீடுகளை மக்களிடம் கையளிக்கும் வைபவத்தில் ஜப்பான் நாட்டின் தூதுவர் அக்கியோ சூடாவும் கலந்து கொள்ளவுள்ளார். (க-9)

## பாடசாலைகளுக்கு இடையிலான சதுரங்கப் போட்டி

தமிழ் செய்தி தகவல் மையத்தினுள் நடாத்தப்படவுள்ள பாடசாலைகளுக்கிடையிலான சதுரங்கப் போட்டிக்கான விண்ணப்பப் படிவங்கள் சகல பாடசாலை அதிபர்களிற்கும் நேரடியாக வழங்கப்பட்டுள்ளது.

இதுவரை படிவங்கள் கிடைக்கப்பெறாத அதிபர்கள் - தமிழ் செய்தி தகவல் மையத்துடன் 9545 தொலைபேசி மூலமோ அல்லது நேரடியாகவோ தொடர்புகொண்டு படிவங்களைப் பெற்றுக்கொள்ளலாம் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இவ்விண்ணப்பப் படிவங்களை இம்மாதம் 29 ஆம் திகதிக்கு முன்னர் தமிழ் செய்தி தகவல் மையம், 180, பருத்தித்துறை என்னும் முகவரிக்கு அனுப்பிவைக்கலாம். (து-7)

## நாட்டை அபிவிருத்தி செய்வதற்கு கிராமங்களை முன்னேற்ற வேண்டும்

### ஜனாதிபதி தெரிவிப்பு

(கொழும்பு)

கிராமங்களை அபிவிருத்தி செய்ய அனைத்து அரசியல் கட்சிகளும் இணைந்து செயற்படவேண்டுமென்று ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்தார்.

கட்சி பேதங்களை மறந்து கிராமத்தின் முன்னேற்றத்திற்காக நாங்கள் ஒன்றுபடவேண்டிய காலம் வந்துள்ளது.

கமநகுல என்ற கிராம அபிவிருத்தித் திட்டத்தை நேற்று ஆரம்பித்து வைத்து உரையாற்றும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் கூறுகையில்,

மஹிந்த சிந்தனையில் கூறப்பட்டவைகளுக்கு செயல் வடிவம் கொடுக்கும் வகையில் இந்தக் கிராமங்களின் அபிவிருத்தித் திட்டம் ஆரம்பிக்கப்படுகின்றது.

நாட்டை விருத்தி செய்யும் வகையில் கிராமப்புறங்களை துரிதமாக அபிவிருத்தி செய்வதே எனது எண்ணமாகும்.

கிராம அபிவிருத்தித் திட்டத்தை அடிப்படையாகக் கொண்டே வீதி அபிவிருத்தித் திட்டம் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

கிராமங்களின் அடிப்படை வசதிகளை மேம்படுத்தும் எதிர்பார்ப்புகள் அனைத்தும் தற்போது நிறைவேற்றப்பட்டு வருவது மகிழ்ச்சிக்குரிய விடயமென்றும் தெரிவித்தார். (த-9)

## தொழில்நுட்பக் கல்லூரிக்கு விண்ணப்பம் கோரல்

(கொழும்பு)

வடக்கு- கிழக்கு மாகாணம் உட்பட நாட்டின் சகல பாகங்களிலும், தற்போது இயங்கிவரும் தொழில்நுட்பக் கல்லூரிகளுக்கு 2006ஆம் ஆண்டிற்கான புதிய மாணவர்கள் சேர்த்துக் கொள்ளப்படவுள்ளதாக தொழில்நுட்பக் கல்வி பயிற்சித் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் தெரிவித்துள்ளார்.

இத் தொழில்நுட்பக் கல்லூரிகளில் இணைந்துகொள்ள விரும்பும் மாணவர்கள் தமது விண்ணப்பங்களை எதிர்வரும் 30ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பிவைக்குமாறும்,

நாட்டின் 16 தொழிற்பயிற்சி நெறிகளுக்கு புதிய மாணவர்களை அனுமதிப்பதற்கான விண்ணப்பங்கள் தற்போது கோரப்பட்டுள்ளதால் விண்ணப்பதாரிகள் அந்தந்த தொழில்நுட்பக் கல்லூரிஅதிபர்களுக்கு விண்ணப்பங்களை அனுப்பிவைக்குமாறும் அவர் கேட்டுள்ளார்.

முழுநேர மற்றும் பகுதிநேர அடிப்படையில் தமிழ் மற்றும் சிங்களம் ஆகிய மொழிகளில் பாட போதனைகள் மேற்கொள்ளப்படவுள்ளன.

முழுநேர பயிற்சி நெறிகளுக்குத் தேர்ந்தெடுக்கப்படும் மாணவர்களின் குடும்ப பொருளாதார நிலைமைகளைக் கருத்திற்கொண்டு மாதாந்தம் 450 ரூபா ஊக்குவிப்புக் கொடுப்பனவாக வழங்கப்படவுள்ளதுடன் புகையிரதம் மற்றும் பஸ் வண்டிகளுக்கான பருவ கால சீட்டுக்களும் வழங்கப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

கல்விப் பொதுத்தராதர சாதாரண தரப்பரீட்சை மற்றும் தரம் 10 வகுப்புக்களில் சித்தியடைந்த 17 வயதுக்கும் மேற்பட்ட மாணவர்கள் விண்ணப்பிக்க முடியும் என்றும் அவர் தெரிவித்துள்ளார். (து-9)

## விபத்தில் இருவர் பலி

(சிலாபம்)

சிலாபம் மாருவெல பிரதேசத்தில் நேற்று அதிகாலை 6.30 மணியளவில் இடம்பெற்ற வாகன விபத்தில் இரண்டு பேர் உயிரிழந்துள்ளார்கள்.

உந்துருளி ஒன்றுடன் பார ஊர்தி மோதியதில் இந்த விபத்து ஏற்பட்டதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இந்தச் சம்பவத்தில் உந்துருளியில் பயணித்த தம்பதியர் ஸ்தலத்திலே பலியானதாக பொலிஸார் தெரிவித்துள்ளார்கள்.

இந்த விபத்தையடுத்து பார ஊர்தியின் சாரதி கைது செய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. (த-9)

மீள்பார்வை

எதிர்வரும் 28.03.2006 முதல் உங்கள்
வலம்புரியில் தென்னாபிரிக்க மக்களின்
விடுதலைக்காகப் போராடி 26 வருடங்கள்
சிறைசென்று மீண்ட

நெல்சன் மண்டேலா

அனைவரும் அறிய வேண்டிய அற்புதத்
தொடர் வாசிக்கத் தவறாதீர்,
வலம்புரியின் மீள்பார்வையில் இதுவரை
நீங்கள் அறிந்தவை,

◆தேச வழமை ◆ஈழத்தமிழர் இறைமை
◆இலங்கைப் பாராளுமன்றம்
◆சதாம் உசேன்
◆சந்தனக் கடத்தல் வீரப்பன்
◆கிரிக்கெற் வீரர் ,சச்சின் டெண்டுல்கர்
◆நடிகர் திலகம் சிவாஜி கணேசன்


# அ.தி.மு.க 182 தொகுதிகளில் போட்டி

(சென்னை)

அ.தி.மு.க தலைமையிலான ஜனநாயக மக்கள் கூட்டணியில் ம.தி.மு.க விடுதலைச் சிறுத்தைகள், முஸ்லிம் லீக், தேசிய லீக் பார்வர்டு பிளாக் கட்சிகள் இடம்பெற்றுள்ளன.

தேர்தலில் அ.தி.மு.க கூட்டணிக்கட்சிகள் போட்டியிடும் 234 தொகுதிகள் பட்டியலை முதல் அமைச்சர் ஜெயலலிதா நேற்றுக் காலை அதிகாரபூர்வமாக வெளியிட்டார்.

அ.தி.மு.க 182 தொகுதிகளிலும், ம.தி.மு.க - 35 தொகுதிகளிலும், விடுதலை சிறுத்தைகள்- 9 தொகுதிகளிலும், தேசிய லீக், ஐ.என்.டி.யூ.சி தலா - 2 தொகுதிகளிலும், ஸ்ரீதர்வாண்டையாரின் மூவேந்தர் முன்னேற்றக் கழகம், சந்தானத்தின் பார்வர்டு பிளாக், முஸ்லிம் லீக் கட்சியினர் தலா ஒரு தொகுதியிலும் போட்டியிடுகின்றனர். (கு)



தொகுதி உடன்பாடு குறித்து தி.மு.க. தலைவர் கருணாநிதியைச் சந்தித்த ராமதாஸ் அவருக்குப் பொன்னாடை போர்த்துகிறார்.


# கூட்டணியில் சேர ஆட்சியில் பங்கு

## விஜயகாந்த் விளக்கம்

(வேலூர்)

கூட்டணியில் சேர ஆட்சியில் பங்கு கேட்டது ஏன்? என்பது குறித்து விஜயகாந்த் விளக்கம் அளித்துள்ளார்.

3 நாள் சுற்றுப்பயணத்தை மேற்கொண்டு வேலூர் வந்த தேசிய முற்போக்குத் திராவிட கழக நிறுவனத் தலைவர் விஜயகாந்த் அங்கு திறந்த வானில் இருந்தபடியே பேசினார்.



நீங்கள் தமிழ் நாட்டில் எம்.ஜி.ஆர். ஒருவருக்குத்தான் தொடர்ந்து 11 வருடம் ஆட்சி செய்ய அனுமதி வழங்கினீர்கள். அதன் பிறகு மாறி மாறி 2 கட்சிகளுக்கு வாக்களித்தீர்கள். அவர்கள் உங்களுக்காக என்ன செய்தார்கள். உங்களுக்குப் பணியாற்ற எனக்கு இந்த ஒரு தடவை வாய்ப்புத் தாருங்கள். என்னைவிட பெரியவர்களாக இருந்தால் உங்கள் மகன் போல் நினைத்து எங்களுக்கு வாக்களியுங்கள். வயதில் மூத்தவர்களாக இருந்தால் தம்பியாக நினைத்து வாக்களியுங்கள். இந்த ஒரு தடவை எனக்கு நீங்கள் சந்தர்ப்பம் அளித்தால் தமிழ் நாட்டையே மாற்றி காட்டுகிறேன்.

விஜயகாந்த் கூட்டணி சேர்ந்து விட்டார், சேரப் போகிறார் என்றெல்லாம் கூறுகிறார்கள். ஆனால் நான் இதுவரை யாரிடமும் கூட்டணி சேரவில்லை. இனி மேலும் சேரப் போவதும் இல்லை. யாரிடமும் விலை போகவுமில்லை. கூட்டணி பிரச்சினைக்கு ஒரு முற்றுப் புள்ளி வைக்க வேண்டும் என்ற வகையில் தான் நான் ஆட்சியில் பங்கு கேட்டேன். ஆனால் அதற்கு இதுவரை யாரும் பதில் சொல்லவில்லை.



நாங்கள் ஆட்சிக்கு வந்தால் நகரத்துக்கு ஈடாக கிராமப்புறங்களிலும் சுகாதார வசதி செய்து கொடுப்போம். தனியார் பள்ளிகளைப் போல் அரசு பள்ளிகளின் தரத்தை உயர்த்த பாடுபடுவோம்.

படித்த இளைஞர்களுக்கு, தொழிற் படிப்பு படித்தவர்களுக்கு வங்கிகள் மூலம் கடன் பெற்றுத் தந்து அவர்கள் சுயதொழில் செய்ய உதவியாக இருப்போம். மாவட்டம் தோறும் முதியோர் இல்லங்களைத் திறந்து அங்கு முதியோர்களைச் சேர்த்து அவர்களை எமது தாய், தந்தை போல் பார்த்து கொள்வோம். இந்த ஒரு தடவை எங்களுக்கு ஆட்சி அமைக்க வாய்ப்பு தந்தால் அதன் பிறகு 50 கட்சிகள் சேர்ந்தாலும் கூட எம்மை ஆட்சியில் இருந்து இறக்க முடியாது. இவ்வாறு விஜயகாந்த் பேசினார். (கு)

# பஞ்சாப் - பாகிஸ்தான் பஸ் போக்குவரத்து

இந்தியா – பாகிஸ்தான் உறவு மேம்பட்டு வருவதை அடுத்து பல்வேறு பாதைகளில் இரு நாடுகளுக்குமிடையே பஸ் மற்றும் ரயில் போக்குவரத்து ஆரம்பமாகியுள்ளது.


சீக்கியர்களின் புனித நகரமான பஞ்சாப் மாநிலம் அமிர்தசரஸ், பாகிஸ்தானில் சீக்கியர்களின் முதல் குருவான குருநானக் அடக்க ஸ்தலமான நான்கானா சாகீப் இடையே பஸ் போக்குவரத்து நடைபெறும்.

இதன் தொடக்க விழா நேற்று நடந்தது. பிரதமர் மன்மோகன்சிங் கொடி அசைத்து பஸ் போக்குவரத்தைத் தொடங்கி வைத்தார்.

அப்போது அவர், பாகிஸ்தானுடன் உறவை மேம்படுத்தி கொள்வதில் இந்தியா அக்கறையோடு இருக்கிறது. இரு நாடுகளுக்குமிடையேயுள்ள வேற்றுமைகளை மறந்து பொது பிரச்சினைகளில் கவனம் செலுத்துவது அவசியமானதாகும். வறுமை ஒழிப்பு, நோய் ஒழிப்பு, அறியாமையைப் போக்குதல் போன்றவற்றில் அதிக கவனம் செலுத்த வேண்டும். பொருளாதார வளர்ச்சியிலும் இரு நாடுகளும் ஒன்று சேர்ந்து செயற்படுவது அவசியமானதாகும் எனக் கூறினார். (கு)



இரட்டை பதவி பிரச்சினையில் காங்கிரஸ் தலைவி சோனியா தனது எம்.பி.பதவியை ராஜினாமா செய்தார். அவர் ராஜினாமா செய்ததற்கு எதிர்ப்பு தெரிவித்தும், ராஜினாமாவை வாபஸ் வெறக்கோரியும் ஏராளமான காங்கிரஸ் தொண்டர்கள் டெல்லியில் சோனியா வீட்டுக்கு முன் திரண்டு ஆர்ப்பாட்டம் நடத்தினர்.



காங்கிரஸ் எம்.பி.ராகுல்காந்தி லோக்சபா சபாநாயகர் சோம்நாத் சட்டர்ஜியைச் சந்தித்துப் பேசினார்.

# எம்.பி. க்களைப் பாதுகாக்க அவசர சட்டம்?



(புதுடில்லி)

ஆதாயம் தரும் பதவிகளில் இருக்கும் எம்.பிக்களைப் பாதுகாப்பதற்காக அவசரச் சட்டம் எதையும் கொண்டுவருவது குறித்து நாங்கள் யோசிக்கவில்லை என்று பிரதமர் மன்மோகன் சிங் கூறினார்.

அவர் டில்லியில் கடந்த வியாழக்கிழமை நிருபர்களைச் சந்தித்தார். ஆதாயம் தரும் பதவி என்பது ஒரு பிரச்சினையாக உருவெடுத்துள்ளது. அனைத்து அரசியல் கட்சிகளும் அக் கட்சிகளில் உள்ள தலைவர்களும் அதனால் பாதிக்கப்பட்டுள்ளனர். இதர அரசியல் கட்சிகளுடன் இது குறித்து விவாதிப்போம். அவசர சட்டம் கொண்டுவருவது உட்பட அனைத்து வாய்ப்புக்கள் குறித்தும் ஆலோசிப்போம்.



சோனியா காந்தியை மற்றவர்களும் பின்பற்ற வேண்டுமா என்பது பற்றி நான் ஏதும் கூறமுடியாது என்றார் பிரதமர்.

சோனியாவைப் பின்பற்றி, மக்களவைத் தலைவர் சோம்நாத் சட்டர்ஜியும் பதவி விலக வேண்டும் என நினைக்கிறீர்களா? என்று நிருபர்கள் கேட்டதற்கு, அது பற்றி எனக்குத் தெரியாது என்றார் மன்மோகன். (கு)

இந்திய வலம்

# பிரேமானந்த ஆச்சிரம சொத்து ஏலத்தில் விடுவதற்கு இடைக்காலத்தடை

(மதுரை)

புதுக்கோட்டை பிரேமானந்த ஆச்சிரம சொத்துக்களை வருமான வரி நிலுவைக்காக ஏலத்தில் விடுவதற்கு உயர் நீதிமன்ற மதுரைக்கிளை இடைக்காலத் தடைவிதித்தது.

பிரேமானந்த அறக்கட்டளை சார்பில் தமயந்தி மாதாஜி தாக்கல் செய்த மனுவில்,

இலங்கையில் இனக் கலவரம் ஏற்பட்டபோது இந்தியா வந்த நாங்கள் புதுக்கோட்டை அருகே பாத்திமா நகரில் ஆன்மீக, சமூகப் பணிகளில் ஈடுபட்டோம். இதன் பின் பல இடங்களில் சொத்துக்களை வாங்கி அநாதை ஆச்சிரமங்கள், பள்ளிகளைத் தொடங்கினோம். 1994 இல் பிரேமானந்த ஆச்சிரமம் என்ற பெயரில் ஒரு அறக்கட்டளையைத் தொடங்கினோம்.


இந்த ஆசிரமத்தின் மீது பொறாமை கொண்டவர்களால் சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுகள் காரணமாக, பிரேமானந்த மீது கொலை வழக்கு தொடரப்பட்டதில் அவருக்கு 1997இல் இரட்டை ஆயுள்தண்டனை விதிக்கப்பட்டது.

இதனால் அறக்கட்டளை நிர்வாகிகள் ஒதுங்கிக் கொண்டனர். தற்போது புதிய நிர்வாகிகள் நியமிக்கப்பட்டு நான் தலைவராகப் பொறுப்பு வகிக்கிறேன். ஏற்கனவே வருமான வரித்துறை அதிகாரிகள் ஆச்சிரமத்தில் சோதனை நடத்தி ஆவணங்களைக் கைப்பற்றிச் சென்றனர்.

அறக்கட்டளைத் தலைவராக நான் பொறுப்பு வகிப்பதால் வருமான வரித் துறையினர் என்னிடம் கணக்கை கேட்டிருக்க வேண்டும். இது குறித்து உயர் நீதிமன்றத்தில் தொடரப்பட்ட வழக்கில் வருமான வரித்துறையினர் என்னிடம் விளக்கம் கேட்க உத்தரவிடப்பட்டது. ஆனால் விளக்கம் கோரவில்லை.

திடீரென ஏலம் விடப்போவதாக உத்தரவிட்டால், அநாதை ஆச்சிரமங்களும், பள்ளிகளில் படித்துவரும் 950 மாணவர்கள், விடுதியில் தங்கிப் படிக்கும் 650 மாணவர்களும் பாதிக்கப்படுவர். ஆச்சிரமத்தில் பூஜை நடவடிக்கைகளும் பாதிக்கப்படும். எனவே, ஏலம் விடத் தடை விதிக்க வேண்டும் எனக் குறிப்பிட்டுள்ளார்.

நீதிபதி பி.ஜோதிமணி முன் இந்த மனு விசாரணைக்கு வந்தது. அப்போது, ஏலத்துக்கு 2 வாரம் இடைக்காலத் தடை விதித்து நீதிபதி உத்தரவிட்டார். (கு)



காங்கிரஸுக்கு ஒதுக்கப்பட்ட தொகுதிகளில் திருப்தி அடையாத காங்கிரஸ் தொண்டர்கள் சென்னையில் வீரப்ப மொய்லியின் உருவ பொம்மையை எரித்தனர்.

# பெற்றோரின் அக்கறையின்மையும் சீரழியும் கல்வித்தரமும்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண மாவட்டத்தில் இயங்கி வருகின்ற பாடசாலைகளில் மெல்லக் கற்கும் மாணவர்களின் விகிதாசாரம் 40 வீதம் முதல் 50 வீதம்வரை இருப்பதாக அண்மைய ஆய்வுகளின் மூலம் தெரிய வந்துள்ளது.

அத்துடன் பாடசாலைகளுக்கு சமுகம் தராமல் இருப்பவர்களும், ஒழுங்கீனமாக வருபவர்களின் தொகையும் 10 சதவீதம் இருப்பதாகவும் அறியப்படுகின்றது.

இதேவேளை பாடசாலைக் கல்விக்கு இடைநடுவில் முழுக்குப் போடுபவர்களின் தொகையும் 20 சதவீதமாகவுள்ளதாகவும் தெரிய வந்துள்ளது.

இந்த நிலையில் மாணவர்களின் கல்வி நிலைகளையும், வரவுநிலையையும் மேம்படுத்துவதற்கான முயற்சிகளை அதிபர்கள், ஆசிரியர்கள் மற்றும் அதிகாரிகள் மேற்கொள்கின்ற போதிலும் கூட, பெற்றோர்களின் ஒத்துழைப்புகள் கிடைக்காமல் இருப்பதாகவும் கூறப்படுகின்றது.

இதன் காரணமாக மாணவர்களின் கல்வி நிலையை மேம்படுத்துவதற்காக எடுக்கப்படும் முயற்சிகள் பயனற்றவையாகவே காணப்படுவதாக அதிகாரிகள் தரப்பில் கூறப்படுகின்றது. இது இவ்விதமிருக்க, கல்விப் பொதுத் தராதர சாதாரண தரப் பரீட்சையில் 60 சதவீதமான மாணவர்கள் சித்தியடையாமல் இருக்கின்றனர் எனவும் தெரிய வருகின்றது. நாட்டின் கல்விச் சீரமைப்பு திட்டத்தினால் கல்வியின் தரம் முன்னேற்றம் அடையவில்லை என்று பெற்றோர் தரப்பில் தெரிவிக்கப்படுகின்றது. (த-16)

## திறப்பு விழா

(யாழ்ப்பாணம்)

துன்னாலை அல்லையம்பதி வடிவேலர் மணிமண்டபத் திறப்பு விழா எதிர்வரும் முதலாம் திகதி சனிக்கிழமை காலை 10.30 மணிக்கு நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக ஓய்வுபெற்ற மாவட்ட நீதியரசர் மு.திருநாவுக்கரசும், சிறப்புரை[illegible]ளை ஆறு திருமுருகன் மற்றும் சின்னமணி கணபதிப்பிள்ளை ஆகியோரும் வழங்கவுள்ளனர். (த-9)

## நவோதயா பாடசாலைகளின் உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்த நடவடிக்கை

(கொழும்பு)

வடக்கு-கிழக்கு மாகாண கல்வியமைச்சின் கீழ் தற்போது இயங்கி வரும் 36 நவோதயா பாடசாலைகளின் உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக கல்வியமைச்சின் நவோதயா திட்டப் பணிப்பாளர் தெரிவித்துள்ளார்.

இந்தப் பாடசாலைகளுக்குத் தேவையான வகுப்பறை வசதிகள், ஆய்வுகூடம், நீர்விநியோகம், மின் விநியோகம், கழிவறை வசதிகள் மற்றும் சுற்றுமதில்கள் என்பவற்றை அமைப்பதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது.

இதற்கென ஒவ்வொரு பாடசாலைக்கும் தலா 25 இலட்சம் ரூபா நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இந்த நிதியிலிருந்து வலயக் கல்விப் பணிப்பாளர்களின் சிபார்சின் அடிப்படையில் உரிய அபிவிருத்தித் திட்டம் அடையாளம் காணப் பட்டு நிறைவேற்றப்படவுள்ளது.

நாடளாவிய ரீதியில் ஒவ்வொரு செயலகப் பிரிவிலிருந்தும் தலா ஒரு பாடசாலையைத் தெரிவு செய்து, நவோதயா எனப்படும் விசேட திட்டத்தின் கீழ் அந்தப் பாடசாலைகளை கல்வியமைச்சு அபிவிருத்தி செய்து வருகின்றது.

நாட்டின் அனைத்து மாகாணங்களிலும் தற்போது 37 நவோதயா பாடசாலைகள் தெரிவு செய்யப்பட்டு நவீன பாடசாலைகளாக அபிவிருத்தி செய்யப்பட்டு வருகின்றது. (த-9)

## கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம், நல்லூர், கோப்பாய் ஆகிய பிரதேச பிரிவுகளைச் சேர்ந்த கிராமஅலுவலர்களுக்கான மூன்றாவது கட்ட கலந்துரையாடல் இன்று காலை 10 மணிக்கு யாழ். மாவட்ட நீதிபதி இ.த.விக்னராஜா தலைமையில் நடைபெற வுள்ளது.

இப் பிரதேச பிரிவுக்குட்பட்ட கிராம அலுவலர்களை தவறாது கலந்துகொள்ளுமாறு பதிவாளர் செல்வி மீரா கேட்டுக் கொண்டுள்ளார். (த-132,133)


அமரர் திரு சி. அரியகுட்டி அவர்கள் நினைவாக
வீனஸ் விளையாட்டுக்கழகம் கலையகம் ச.ச.நிலையம்
இணைந்து நடாத்தும் மாவட்ட ரீதியிலான
கரப்பந்தாட்டச் (செற்-அப்)
சுற்றுப்போட்டி-2006

போட்டி நிபந்தனைகள்:-

01. பங்குபற்றும் அணி பந்து கொண்டுவருதல் வேண்டும்.
02. குறிப்பிட்ட நேரத்துக்கு 15 நிமிடம் முன்னதாக மைதானத்தில் சமுகமளித்திருக்கவேண்டும். தாமதமாகவரும் அணிக்கு 15 நிமிட அவகாசம் அளிக்கப்படும் அதற்குள் சமுகமளிக்காது விட்டால் எதிரணிக்கு வெற்றி அளிக்கப்படும்.
03. போட்டி சம்பந்தமாக நடுவரின் தீர்ப்பே இறுதியானது.
04. போட்டிகள் A,B என இரண்டு பிரிவாக லீக் முறையில் நடைபெற்றுசுற்றில் இரண்டு பிரிவிலுமிருந்து புள்ளி அடிப்படையில் வெற்றி பெற்ற இவ்விரண்டு கழகங்கள் அரையிறுதிப் போட்டிக்குத் தெரிவு செய்யப்படும். அரை இறுதிப்போட்டி விலகல்முறையில் நடைபெறும்.
05. வெற்றி பெறும் கழகத்திற்கு வெற்றிக்கிண்ணத்துடன் பணப் பரிசும் வழங்கப்படும்.

25.03.2006 :- விண்ணப்ப முடிவு

விண்ணப்பிக்கும் முகவரி-

தலைவர், வீனஸ் வி.கழகம் ஆவரங்கால் கிழக்கு, மணற்பகுதி, புத்தூர்.

மேலதிக விபரங்கள் தேவைப்படின் தலைவர், செயலாளருடன் தொடர்பு கொள்ளவும்.

ஊடக அனுசரணை : வலம்புரி-சங்குநாதம்


## தவக்கால சிந்தனை



"உங்கள் கடவுளாகிய ஆண்டவர் நானே. என் குரலுக்கு செவி கொடுங்கள்"

"பெண்ணே ஏன் விலக்கப்பட்ட கனியை உண்டாய்" என்றார் கடவுள். "பாம்பு என்னை ஏமாற்றியது நானும் உண்டேன்" என்றாள் ஏவாள். "பெண்ணே மீட்பின் கனியாம் இறைமகனுக்குத் தாயாக வேண்டும்" என்றார். கடவுள். "நான் உம் அடிமை உம் சொற்படி நிகழட்டும்" என்றார் மரியா. அந்நேரமே இறைவன் மனிதனார்! கடவுளின் சுதந்திரம் மரியாளின் சுதந்திரத்துடன் கூடிய உரையாடலின் விளைவாக மனிதம் புதுமையடைகிறது. உலகம் மீட்படைகிறது. மரியா இறைவனின் தாயாகிறார். தெய்வீகமும் மனிதமும் ஒன்றை ஒன்று தழுவிக்கொள்கிறது.

முழுமையான ஒத்துழைப்பு நல்குகிறது. படைப்பனைத்தும் புதுப்பிக்கப் பெறுகிறது. வீழ்ச்சியுற்றதெல்லாம் எழுச்சி பெற்று மாட்சியுடன் மகிழ்கிறது. கடவுளின் வியத்தகு மீட்பின் திட்டம் நிறைவேறுகிறது. இப் புனிதமான நாளில் நமது உள்ளத்து சுதந்திரம் இறைவனுக்கு முழுமையாகத் திறந்திருக்கட்டும். காவலன்


பிரதேச செய்தியாளர்

பதவி வெற்றிடங்கள்

பத்திரிகைத்துறையில் ஆர்வமுள்ள இரு பாலாரிடமிருந்தும் குடா நாடு அளாவிய ரீதியில் பிரதேச செய்தியாளர் பதவிக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

பொருத்தமானவர்கள் முழுப்பெயர், நிரந்தர முகவரி, தற்போது வசிக்கும் முகவரி (இருப்பின்), தேசிய அடையாள அட்டை இலக்கம், பால், பிறந்த திகதி, கி.சே.பிரிவு, பிரதேச செய்தியாளர் பிரிவு, தனிப்பட்ட வரா, திருமணமானவரா? கல்வித்தகைமை, மேலதிக தகைமை உள்ளிட்ட விபரங்களுடன் உறவினர் அல்லாத, தங்களைப் பற்றி விசாரிக்கக்கூடிய இருவரின் பெயர் விலாசங்களுடன் கூடிய விண்ணப்பங்களை,

பிரதம ஆசிரியர்,
வலம்புரி,
இல.3, 2ஆம் ஒழுங்கை,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.

என்ற முகவரிக்கு 31.03.2006 ஆம் திகதிக்குப் பிந்தாமல் அனுப்பி வைக்கவும்.

குறிப்பு: கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் ''பிரதேச செய்தியாளர் பதவி'' எனத் தவறாது குறிப்பிடவும்.


## உண்டியல் திருட்டு

(மூளாய்)

மூளாய் மேற்கு கம்மானை வைரவர் ஆலய திருப்பணி உண்டியல் திருடப்பட்டுள்ளது.

கடந்த ஞாயிற்றுக்கிழமை நடந்த இந்தத் திருட்டுச் சம்பவத்தில் பல ஆயிரக் கணக்கான ரூபாய்கள் உண்டியலுடன் சேர்த்து திருடப்பட்டதாக தெரிவிக்கப்படுகின்றது. (த-9)

## மரக்கறிகளை சந்தைப்படுத்த முடியாத நிலையில் விவசாயிகள்

(ஊர்காவற்றுறை)

தீவகம் வடக்கு ஊர்காவற்றுறைப் பிரதேசத்தில் உள்ள சிறு பயிர்ச்செய்கையாளர்கள் தங்களால் செய்கை பண்ணப்படும் தக்காளி, வெண்டி, பயறு, கத்தரி, மிளகாய் போன்றவைகளை சந்தைப்படுத்த முடியாத நிலை ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கின்றனர். மரக்கறி வியாபாரிகள் குறைந்த விலையில் கொள்வனவு செய்வதாலேயே இந்த நிலை ஏற்பட்டுள்ளதாக அவர்கள் கூறுகின்றனர்.

இதேவேளை, ஊர்காவற்றுறைச் சந்தையில் மரக்கறிகளின் விலை என்றுமில்லாத வகையில் வீழ்ச்சியடைந்துள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (க-72)

# நடைபாதை வியாபாரிகளின் பொருட்கள் பறிமுதல்!

(யாழ்ப்பாணம்)

நடைபாதை வியாபாரத்தில் ஈடுபட்டவர்களின் பொருட்கள் யாழ். மாநகரசபையினால் நேற்று முன்தினம் பறிமுதல் செய்யப்பட்டு உழவு இயந்திரங்களில் ஏற்றிச் செல்லப்பட்டது.

யாழ். ஆஸ்பத்திரி வீதி மற்றும் ஆரியகுளம் சந்திப் பகுதியில் போக்குவரத்திற்கு இடையூறு விளைவிக்கும் வகையில் வியாபாரத்தில் ஈடுபட்டவர்களது பொருட்களே யாழ். மாநகர சபையினரால் ஏற்றிச் செல்லப்பட்டது.

கடந்த செவ்வாய்க்கிழமை நடைபெற்ற நகர அபிவிருத்திக் கூட்டத்தில் எடுக்கப்பட்ட தீர்மானத்திற்கு அமைவாகவே இத்தகைய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

இதேவேளை, எதிர்வரும் புது வருடத்துடன் தனியார் சிற்றூர்தி சேவை பண்ணை வீதிக்கு மாற்றப்படவுள்ளதாகவும் முனீஸ்வரன் வீதியில் அமைந்துள்ள நடைபாதை வியாபார நிலையங்கள் புதிதாக அமைக்கப்பட்ட அங்காடிக்கும் மாற்றப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (க-132,133)


பதவி வெற்றிடங்கள்

உதவி ஆசிரியர் (பெண்கள் -பகல்), அலுவலகச் செய்தியாளர்கள் (பெண்கள் - பகல்), பாதுகாப்பு உத்தியோகத்தர், பத்திரிகை விநியோகஸ்தர்கள், உள்ளகக் கணக்காய்வாளர் பதவிகளுக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

உதவி ஆசிரியர், அலுவலகச் செய்தியாளர்கள் பதவிக்கு விண்ணப்பிப்பவர்கள் குறைந்த பட்சம் க.பொ.த.(உ/த) பரீட்சையில் தமிழ் மொழியில் திறமைச் சித்தியடைந்தவர்களாக இருக்க வேண்டும்.

உள்ளகக் கணக்காய்வாளர் பதவிக்கு விண்ணப்பிப்போர் இத் துறையில் குறைந்த பட்சம் 3வருட அனுபவம் உடையவர்களாக, அல்லது க.பொ.த.(உ/த) இல் வர்த்தக பாடங்களில் சித்தியடைந்தவர்களாக இருக்க வேண்டும். வயதெல்லை கவனிக்கப்படமாட்டாது. விண்ணப்பங் கள் 31.3.2006 ஆம் திகதிக்குப் பிந்தாமல்,

பிரதம ஆசிரியர்,
வலம்புரி,
இல.3, 2ஆம் ஒழுங்கை,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.

என்ற முகவரிக்கு அனுப்பி வைக்கப்படவேண்டும்.

விண்ணபங்களை அனுப்பும் உறையின் இடது பக்க மேல் மூலையில் விண்ணப்பிக்கும் பதவியின் பெயர் குறிப்பிடப்படவேண்டும்.


# எயிட்ஸினால் பாதிப்படைவோரின் எண்ணிக்கை அதிகரித்து வருகிறது

## யுனிசெப் சுட்டிக்காட்டு

(கொழும்பு)

இலங்கையில் எயிட்ஸ் நோய் தொற்றுடையவர்களின் எண்ணிக்கை நாளுக்கு நாள் அதிகரித்து வருவதாக யுனிசெப் நிறுவனம் தெரிவித்துள்ளது.

இதுவரை இலங்கையில் எச்.ஐ.வி வைரஸ் தொற்றியுள்ள 745 பேர் இனம் காணப்பட்டுள்ளதாக யுனிசெப் நிறுவனத்தின் எயிட்ஸ் தொடர்பான பிரிவின் இலங்கைக்கான அதிகாரி டாக்டர் ஹரிச்சந்திர தெரிவித்துள்ளார்.

இந்த எண்ணிக்கை விரைவில் ஆயிரத்தை தாண்டக்கூடும் என்றும் அவர் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

நாட்டிலுள்ள இளைஞர்களில் 50 வீதத்திற்கும் மேற்பட்டோருக்கு எயிட்ஸ்நோய் பற்றிய விளக்கங்கள் போதியளவில் இல்லை என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (க-9)

# 3208 பேருக்கு மருத்துவசேவை

யாழ்ப்பாணத்தில் இயங்கி வரும் குடும்ப புனர்வாழ்வு நிலையம் கடந்த வருடத்தில் டனிடா, யூஎஸ் எயிட் நிறுவனங்களின் நிதியுதவியுடன் மொத்தமாக 3 ஆயிரத்து 208 பயனாளிகளுக்கான மருத்துவ சேவை, உளவளத்துணை மற்றும் அங்கப் பயிற்சிகளை வழங்கியுள்ளதாக நிலையத்தின் மாவட்ட இணைப்பாளர் எஸ்.சீ. எஸ். சிதம்பரநாதன் தெரிவித்துள்ளார்.


இந்தவகையில் ஆயிரத்து 438 பயனாளிகளுக்கு மருத்துவ சேவையையும், ஆயிரத்து 195 பயனாளிகளுக்கு உளவளத்துணைச் சேவையையும், 575 பயனாளிகளுக்கு அங்கப்பயிற்சியையும் வழங்கியுள்ளது எனத் தெரிய வருகின்றது.

அதேசமயம் யுத்தத்தினால் பாதிப்படைந்த நிலையில் வீடுகளில் தங்கியிருக்கும் 1012 பயனாளிகளையும் நேரடியாகச் சந்தித்துள்ளமையும் குறிப்பிடத்தக்கதாகும். (த-16)

# ஈரான் விவகாரத்தில் இரட்டை வேஷமா? மறுக்கிறார் அமெரிக்க அதிபர் புஷ்

(வாஷிங்டன்)

சிவில் பயன்பாட்டிற்கான அணுசக்தி விவகாரத்தில் ஈரான், இந்திய நாடுகள்



இடையே அமெரிக்கா இரட்டை நிலையைக் கடைப்பிடிக்கவில்லை. அணு ஆயுத பரவலுக்கு துணை போகாத நாடு இந்தியா என்பது நிருபிக்கப் பட்டுள்ளது என அமெரிக்க அதிபர் புஷ் தெரிவித்துள்ளார்.

அமெரிக்கா மேற்கு வெர்ஜினியா மாகாணத்தில் உள்ள வீலிங் என்ற இடத்தில் நடைபெற்ற கூட்டத்தில் அமெரிக்க அதிபர் ஜோர்ஜ் டபிள்யூ. புஷ் கலந்து கொண்டார். அப்போது அவர் உரையாற்றுகையில்,

அணு ஆயுத விவகாரத்தை பொறுத்தமட்டில் இந்தியா கடந்த 30 ஆண்டுகளுக்கும் மேலாக அணு ஆயுத பரவல் தடைசட்டத்தின் விதிகளை மீறாமல் உள்ளது என்பது என் கருத்து. அணு ஆயுத விஷயத்தில் இந்தியா வெளிப்படையாக உள்ளது. இந்திய பொருளாதாரத்தை மேம்படுத்த அணுசக்தியை பயன்படுத்த வேண்டும் என்பது அமெரிக்காவின் விரும்பம். இந்தியா வளர்ச்சி அடைய எரிசக்தி தேவை. இந்த பிரச்சினையில் சர்வதேச அணு சக்தி கட்டுப்பாட்டு அமைப்பின் விதிமுறைகளுக்கு உட்பட இந்தியா தயாராக இருக்கிறது.

ஆனால்த ஈரான் வெளிப்படையான செயல்பாடுகள் அற்ற நாடு. அங்கு ஜன நாயகம் இல்லை. அவர்கள் தீவிரவாதத்தை ஆதரிப்பவர்கள். மேலும் அந்த நாடு சர்வதேச அணுசக்தி ஏஜென்சியில் சேர்ந்துள்ளது. இருந்தும் அவர்கள் விதிகளுக்கு புறம்பாக அணு ஆயதம் தயாரிப்பதை நாம் கையும் களவுமாக பிடித்துள்ளோம்.

அணு ஆயுத பரவல் தடை ஒப்பந் தத்தை ஈரான் அங்கீகரிக்கவில்லை. அந்நாடு அணு ஆயுதத்தை தயாரிப்பதற்காக யுரேனியத்தை செறிவூட்டும் நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளது. சர்வதேச அணுசக்தி ஏஜென்சியின் விதிமுறைகளுக்கு கட்டுப்பட்டு நடக்க இந்தியா முன்வருகிறது. ஆனால் ஈரானியர்கள் அந்த ஏஜென்சியை புறக்கணிக்கின்றனர்.

சிவில் பயன்பாட்டிற்கான அணுசக்தி விவகாரத்தில் இந்தியா மற்றும் ஈரானை இரண்டு விதமாக நாம் நடத்தவில்லை. நாம் இரட்டை வேடம் போடவில்லை என்றார். (து)

உலக தரிசனம்



இஸ்ரேலில் தேர்தல் பிரச்சாரத்தில் ஈடுபட்டுள்ள லேபர் பார்ட்டி தலைவர் அமிர் பெரஸ், கிரியத் ஸ்மோனா என்ற ஊரில் மார்க்கெட்டில் உள்ளவர்களிடம் ஓட்டு கேட்டார்.

# அமெரிக்கா செல்கிறார் சீன அதிபர்

(வோஷிங்டன்)

சீன அதிபர் ஹூ ஜிண்டவோ ஏப்ரல் மாதத்தில் அமெரிக்க சுற்றுப்பயணம் மேற் கொள்கிறார். அவரை வரவேற்க அமெரிக்க அதிபர் புஷ் தயாராக இருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

சீன அதிபர் ஹூ ஜிண்டவோ ஏப்ரல் 20ஆம் திகதி முதல் அமெரிக்காவில் சுற்றுப்பயணம் மேற்கொள்கிறார் அன்றைய தினம் அவரை வெள்ளை மாளிகையில் வரவேற்க அதிபர் புஷ் தயாராக இருக்கிறார்.

இரு நாடுகளுக்கு இடையேயான உறவு, சர்வதேச பிரச்சினைகள், தீவிரவாதத்துக்கு எதிரான போர் அணு ஆயுத பரவல் தடை உட்பட பல விஷயங்கள் குறித்தும் இருதலைவர்கள் பேச்சுவார்த்தை நடத்துவர் என வெள்ளை மாளிகை சார்பில் வெளியிடப்பட்டுள்ள அறிக்கையில் கூறப்பட்டுள்ளது. (து)

# இந்தியாவுடனான முத்தரப்பு செயற்பாடு விரைவுபடுத்த ரஷ்யா, சீனா அதி தீவிரம்

இந்தியா, சீனா மற்றும் ரஷ்யா இடையே முத்தரப்பு செயல்பாட்டு முறை ஒன்றை உருவாக்க வேண்டும். விரைவாக இதைச் செய்ய வேண்டும் என சீன அதிபர் ஹூஜிண்டாவோ விரும்பம் தெரிவித்தார்.

ரஷ்ய அதிபர் விளாமிடிர் புடின் சீனாவில் சுற்றுப் பயணம் செய்து வருகிறார். இரு நாடுகளின் வெளியுறவு அமைச்சர்கள் மற்றும் உயர்மட்ட அளவிலான பேச்சுவார்த்தைகள் நடந்தன. அதன் பிறகு சீன அதிபர் ஹூ ஜிண்டாவோ மற்றும் ரஷ்ய அதிபர் புடின் இருவரும் கையெழுத்திட்ட சீனோ- ரஷ்ய கூட்டறிக்கை வெளியிடப்பட்டது.

அந்த அறிக்கையில், சர்வதேச அளவிலான புதிய அச்சுறுத்தல்கள் மற்றும் சவால்களை சமாளிக்க ரஷ்ய-சீன இந்திய முத்தரப்பு செயல்பாட்டு முறை அவசியம். அதற்கான நடவடிக்கைகளை துரிதப்படுத்த வேண்டும். மிகப் பெரிய நாடுகளான ரஷ்யா, சீனா மற்றும் இந்தியா கிழக்கு பகுதியில் பாதுகாப்பு, ஸ்திரத்தன்மை மற்றும் வளர்ச்சியில் இணைந்து செயல்படுவது அவசியம் என்று கூறப்பட்டுள்ளது.

கடந்த 2004ஆம் ஆண்டு வெளியான இந்திய-ரஷ்ய கூட்டறிக்கையிலும் இதே போன்று முத்தரப்பு செயல்பாட்டு முறை மற்றும் ஒப்பந்தத்திற்கு வலியுறுத்தப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது.

சர்வதேச அளவில் மூன்று நாடுகளும் இணைந்து செயல்படும் முயற்சி கடந்த 1998ஆம் ஆண்டு முதன் முதலாக தொடங்கியது. அப்போது இந்தியாவுக்கு சுற்றுப் பயணம் மேற்கொண்ட ரஷ்ய பிரதமர் யெவ்கேனி பிரிமகோவ் அதற்கான முயற்சிகளை தொடங்கிவைத்தார்.

மூன்று நாடுகளின் வெளியுறவு அமைச்சர்கள் இடையிலான உயர்மட்ட பேச்சுவார்த்தை கடந்த ஆண்டு ஜுன் மாதம் ரஷ்யாவில் நடத்தது. இந்த பேச்சுவார்த்தை களை விரைவுபடுத்த வேண்டும் என்பதை இந்திய ரஷ்ய கூட்டறிக்கை மற்றும் சீன-ரஷ்ய கூட்டறிக்கை வலியுறுத்தியுள்ளன. (து)

# பாறையில் மோதி படகு கவிழ்ந்தது பயணிகள் 99 பேர் பத்திரமாக மீட்பு

கனடாவில் பசிபிக் கடற்கரை அருகே 100க்கும் மேற்பட்ட பயணிகளோடு சென்ற பெரிய படகு ஒன்று கடலில் இருந்த பாறையில் மோதி மூழ்கியது. படகில் இருந்த 99 பயணிகள் மீட்கப்பட்டதாக மீட்புப்படை அதிகாரிகள் தெரிவித்தனர்.


கனடாவில் வடமேற்கு பசிபிக் கடற்கரை அருகேயுள்ள பிரிட்டிஷ் கொலம்பியாவை நோக்கி ஒரு படகு 100க்கும் மேற்பட்ட பயணிகளை ஏற்றிக் கொண்டு புறப்பட்டது. இந்திய நேரப்படி நேற்றுமுன்தினம் பிற்பகல் 1.35க்கு கில் தீவு அருகே சென்றபோது பாறை ஒன்றின் மீது படகு மோதி விபத்துக்குள்ளானது. படகிற்குள் தண்ணீர் புகுந்து மெதுவாக கடலுக்குள் மூழ்கத் தொடங்கியது. இதையடுத்து படகில் இருந்து பயணிகள் மரண ஓலமிட்டனர்.

பயணிகளின் கூக்குரலைக்கேட்டு அருகே இருந்த ஹார்ட்லி பே கிராம மக்கள் உடனடியாக படகுகளை எடுத்துக் கொண்டு கடலுக்குள் சென்றனர். பயணிகள்சிலர் படகில் இருந்தலைப் ஜாக்கெட் மற்றும் இதர கருவிகளின் உதவியோடு கடலில் குதித்தனர். மீட்புப் பணிகளில் ஹெலிகொப்டர்கள் ஈடுபடுத்தப்பட்டன. இந்த விபத்தில் இதுவரை 99 பயணிகள் மீட்கப்பட்டதாக மீட்புப்படை அதிகாரிகள் தெரிவித்தனர்.

சில பயணிகளை காணவில்லை. இந்த விபத்தில் 11 பயணிகள் வரை இறந்து இருக்கலாம் என்று கூறப்படுகிறது. ஆனால் படகில் இருந்த இதர பயணிகள் ஹார்ட்லிபே சென்று அங்கிருந்து வேறு வாகனம் மூலமாக சென்று இருக்கலாம் என்றும் கருதப்படுகிறது.

விபத்து நடந்த இடத்தின் வழியாகத்தான் வான்கூவர் மற்றும் அலாஸ்கா பகுதிகளுக்கு ஏராளமான படகுகள் சென்றுவரும். இது தவிர, இந்த பகுதி ஒரு சுற்றுலா தலமாகவும் உள்ளது.

எனவே படகு போக்கு வரத்து மிகுந்த பிரிட்டிஷ் கொலம்பியா பகுதியில் பாறையில் மோதி படகு விபத்து ஏற்பட்டு இருப்பது மக்கள் மத்தியில் அச்சத்தை ஏற்படுத்தி உள்ளது. (து)



ஜப்பானில் உள்ள ஒசாகா நகரில் நடந்த சுமோ போட்டியின் போது இரண்டு மாமிச மலைகள் மோதுகின்றன.

# உலகின் உயரமான மனிதர் மணப்பெண் தேடுகிறார்

உலகிலேயே மிகவும் உயரமான மனிதர் பாவோசிகன். சீனாவின் ஹாங்கொங் பகுதியை சேர்ந்த இவருக்கு இப்போது 55 வயது ஆகிறது. ஆனால் இன்னும் திருமணம் ஆகவில்லை.

இவரது உயரம்தான் இதற்கு காரணம். 2.36 மீற்றர் உயரம் உள்ள இவருக்கு ஏற்ற மனைவி இன்னும் கிடைக்கவில்லை. உலகிலேயே மிக உயரமான மனிதர் என்று கின்னஸ் புத்தகத்தில் இடம்பெற்றுள்ளார்.

தனக்கு மணமகள் தேவை என்று பத்திரிகைகளில் அவர் இப்போது விளம்பரம் கொடுத்து வருகிறார். சிகனுக்கு 5 சகோதரர்களும்சகோதரிகளும்உள்ளனர். ஆனால் அவர்கள் இவரைப் போல உயரம் உள்ளவர்கள் அல்ல. 15வயது வரை இவரது உயரம் சாதாரணமாகவே இருந்தது. ஆனால் 20வயதை எட்டிய போது இவரது உயரம் 2 மீற்றரைத் தொட்டது.

இப்போது இவரது எடை 165 கிலோ. கால்கள் மட்டும் 1.5 மீற்றர் நீளம் இருக்கிறது. நிச்சயம் தனக்கு மணமகள் கிடைப் பாள் என்று நம்பிக்கை தெரிவித்து இருக்கிறார் பாவோ சிகன்.

# போதைப்பொருள் கடத்திய கப்பல் குண்டுவீசி மூழ்கடிக்கப்பட்டது

(கான்பரா)

வடகொரியாவில் இருந்து அவுஸ்ரேலியாவிற்கு போதைப்பொருள்கள் கடத்தப்படுவதாக நீண்ட காலமாகவே அவுஸ்திரேலியா புகார் கூறிவந்தது. இந்த நிலையில் வடகொரியாவின் சரக்குக் கப்பல் ஒன்று ஹெரோயின் போதை பொருளை ஏற்றிக் கொண்டு அவுஸ்திரேலிய கடற்கரைக்கு வந்து கொண்டிருந்தது.

இதுபற்றி தகவல் கிடைத்ததும் அவுஸ்திரேலியாவின் 2போர் விமானங்கள் அந்தக் கப்பலை 100 கி.மீ.தூரம் துரத்தி சரமாரியாக குண்டு வீசியது. இதில் அந்த 4000டன் கப்பல் மூழ் கடிக்கப்பட்டது. அதில் இருந்த நூற்றுக் கணக்கான கிலோ போதைப் பொருட்களும் கடலில் மூழ்கியது. (து)

வரும்முன் காவாதான் வாழ்க்கை
எரி முன்னர்
வைத்தூறு போலக் கெடும்.
-குறள்

வலம்புரி

## வேகமாகப் பரவும் காய்ச்சல் தடுப்பு நடவடிக்கை தேவை

யாழ்ப்பாணக் குடாநாட்டில் காய்ச்சல் காரணமாக வைத்தியசாலைகளில் அனுமதிக்கப்படுபவர்களின் எண்ணிக்கை வேகமாக அதிகரித்து வருகின்றது.

இதனால் குழந்தைகள் முதல் பெரியவர்கள்வரை பாதிக்கப்பட்டுள்ளனர். குறிப்பாக மாணவர்கள் காய்ச்சலுக்கு ஆளாகுவதனால் பாடசாலைகளிலும் மாணவர்களின் வரவு குறைவாகவேயுள்ளது.

ஏற்கனவே மானிப்பாய் பகுதியில் உள்ள பாடசாலை ஒன்றைச் சேர்ந்த ஐம்பதிற்கும் மேற்பட்ட மாணவர்கள் இனம்புரியாத காய்ச்சலினால் பாதிக்கப்பட்டு யாழ்.போதனா வைத் தியசாலையில் அனும்திக்கப்பட்டனர். இச் சம்பவம் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியிருந்தது.

தற்போது யாழ்.குடாநாடு பூராக இனம் புரியாத காய்ச்சல் பரவுவதால் மக்கள் மத்தியில் பெரும் அச்சம் தோன்றியுள்ளது.

நோய்க்கான காரணங்களை நோயின் வகைகளை இனங்காண முடியாததன் காரணமாக சில வைத்தியசாலைகளில் ஊகங்களின் அடிப்படையில் சிகிச்சைகள் அளிக்கப்படுகின்றன.

அதாவது காய்ச்சலின் அறிகுறிகளை வைத்துக்கொண்டு சிகிச்சையளிப்பதால் நெருப்புக் காய்ச்சல் நோயாளி மலேரியாவுக்கான சிகிச்சையும் மலேரியா நோயாளி நெருப்புக் காய்ச்சலுக்கான சிகிச்சையும் பெறும் பரிதாப நிலை காணப்படுகின்றது.

இதைவிட வைரஸ் காய்ச்சல் என்ற விளக்கங்களும் இல்லாமல் இல்லை. இவ்விதம் இரத்தப் பரிசோதனைகளை மேற்கொள்ளாமல் எழுந்தமானமாக சிகிச்சையளிப்பதால், காய்ச்சல் முற்றி நிலைமை மோசமாவதும் அதன் பின்னர் மேற்கொள்ளப்படும் இரத்தப் பரிசோதனைகளின்போது நோய்க் கிருமிகளை இனங்காண முடியாத நிலைமையும் ஏற்பட்டு விடுகின்றது.

எனவே வேகமாகப் பரவி வரும் காய்ச்சலை கட்டுப்படுத்த யாழ்.பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையும் அதன் கீழ் இயங்கும் சுகாதார வைத்திய அதிகாரி பணிமனைகளும் முனைப்புடன் நடவடிக்கைகளை முன்னெடுக்க வேண்டும்.

குறிப்பாக நோய்த் தொற்று, மற்றும் தடுக்கும் வழியிலான சுகாதாரக் கல்வி வேலைத் திட்டங்களை பாடசாலை மாணவர்கள் மத்தியிலும் பொது மக்கள் மத்தியிலும் பரப்புவதுடன் நோய்க் கிருமிகளின் மூலங்களை இனங்கண்டு அவற்றை அழிப்பதிலும் தீவிரமாக ஈடுபட வேண்டும்.

இல்லையேல் வேகமாகப் பரவிவரும் காய்ச்சலை கட்டுப்படுத்துவது கடினமாகும்.

# மதியுரைஞர் பாலாவின் கருத்தில் ஆழமான உண்மை உள்ளது

## திஸ்ஸ அத்தநாயக்க

(கொழும்பு)

இனப்பிரச்சினைத் தீர்வுக்கு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ ஐக்கிய தேசியக் கட்சியுடன் இணைந்து செயற்பட வேண்டியது அவசியம் என்று தமிழீழ விடுதலைப் புலிகளின் மதியுரைஞர் அன்ரன் பாலசிங்கம் தெரிவித்துள்ள கருத்தில் ஆழமான உண்மை உள்ளது என்று ஐக்கிய தேசியக் கட்சியின் துணைப் பொதுச் செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்க தெரிவித்துள்ளார்.

தமிழீழ விடுதலைப் புலிகளின் மதியுரைஞர் அன்ரன் பாலசிங்கம் ரொய்ட்டருக்கு வழங்கிய செவ்வி குறித்து கருத்துத் வெளியிடுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

கடந்த ஜனாதிபதித் தேர்தலில் வடக்கு-கிழக்கில் தமிழ் மக்களை வாக்களிக்க விடாது செய்துவிட்டு மஹிந்த ராஜபக்ஷவுடன் ஐக்கிய தேசியக் கட்சி இணைந்து செயற்பட வேண்டும் என அன்ரன் பாலசிங்கம் இப்போது கூறுவது கவலைக்குரிய விடயம். இருந்தபோதிலும், அவரின் கருத்தில் உண்மையுள்ளது.

தேசிய இனப்பிரச்சினை தொடர்பில் தீர்வு காண்பதற்கு அரசு எதிர்க்கட்சியுடன் இணைந்து செயற்பட வேண்டிய காலம் ஏற்பட்டுள்ளது.

தேசியவாதக் கொள்கையுடன் செயற்படுவதாகக் கூறிக் கொண்டு இனவாதத்துடன் செயற்படும் ஜே.வி.பியினரதும் ஜாதிக ஹெல உறுமயவினரினதும் இணக்கப்பாட்டுடன் இனப்பிரச்சினைக்கு தீர்வு காணமுடியாது. அம் முயற்சி கானல் நீரே ஆகும்.

ஒற்றை ஆட்சி என்ற நிலைப்பாட்டுடன் இனப்பிரச்சினைக்கு தீர்வுகாண முடியாது என்ற யதார்த்தத்தினை மஹிந்த உணர்ந்து கொண்டார்.

அன்ரன் பாலசிங்கமும் அதற்கு ஏற்றாற்போல் இந்தக் கருத்தினை வெளியிட்டுள்ளார்.

அன்ரன் பாலசிங்கத்தின் கருத்துக்களுடன் முழுமையாக இணங்கமுடியாதாயினும் சில விடயங்கள் சரியானதாகவே உள்ளன.

தேசிய அரசாங்கம் ஒன்றினை அமைப்பதற்காக ஜனாதிபதி இதுவரை எந்த அழைப்பினையும் விடுக்கவில்லை. அவ்வாறானதொரு அழைப்பு வந்தால் நிச்சயமாக நாம் பேச்சுகளை நடத்தி ஒரு முடிவின்னை எட்டுவோம்.

இனப்பிரச்சினைக்கு ஐக்கிய இலங்கைக்குள் அதிகாரங்களை பரவலாக்கல் செய்வதன் மூலம் நிரந்தரத் தீர்வு காணலாம் என்ற ஐக்கிய தேசியக் கட்சியின் நிலைப்பாட்டிற்கு தற்போது மஹிந்த வந்துள்ளார்.

எனவே, சமாதானத்திற்காக எத்தகைய உதவிகளையும் செய்ய நாம் தயாராகவே உள்ளோம். மஹிந்தவுடன் இணைந்து செயற்பட்டு நாட்டைப் பிரிக்காத அதிகார பரவலாக்கல் மூலம் இனப்பிரச்சினைக்கு தீர்வு கண்டு இந்த நாட்டில் நிரந்தர சமாதானத்தினை ஏற்படுத்த நாம் தயாராகவே உள்ளோம் என்றார். (தி)

# கணக்காய்வாளர் மீதான விமர்சனம்; மனித உரிமைகள் ஆணையம் கவலை!

(கொழும்பு)

கணக்காய்வாளரை திறைசேரி செயலாளர் பகிரங்க விமர்சனம் செய்தமை குறித்து ஆசிய மனித உரிமைகள் ஆணையம் கவலை தெரிவித்துள்ளது.

ஹொங்கொங்கை தலைமையிடமாகக் கொண்டு இயங்கும் ஆசிய மனித உரிமைகள் ஆணையம் இது தொடர்பில் வெளியிட்டுள்ள அறிக்கையில், அரசாங்கத்தின் ஊழலை வெளிப்படுத்திய கணக்காய்வாளர் சரத் மயதுன்னெவை திறைசேரி செயலாளர் பி.பீ. ஜயசுந்தர அண்மையில் பகிரங்கமாக விமர்சனம் செய்துள்ளார்.

அரச நிறுவனங்களின் பெருந்தொகை நிதி மற்றும் ஆழிப்பேரலை மீளமைப்புக்கான பெருந்தொகையான மில்லியன் டொலர் நிதி மோசடி ஆகியவை தொடர்பில் அவர் பகிரங்கப்படுத்தியிருந்தார்.

இதையடுத்து அவர் பகிரங்க விமர்சனத்துக்குள்ளாக்கப்பட்டுள்ளார். இத்தகைய விடயங்களை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தடுத்து நிறுத்த வேண்டும்.

சட்டபூர்வ அங்கீகாரம் கொண்ட கணக்காய்வாளர் தொடர்பான ஜயசுந்தரவின் எதிர்மறையான அணுகுமுறை விரும்பத்தக்கது அல்ல. அவருக்கு எதிரான சட்டவிரோத, விரும்பத்தகாத நடவடிக்கைகள் தடுத்து நிறுத்தப்பட வேண்டும் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. (தி)

# புலிகள் யுத்தநிறுத்தத்தை கடைப்பிடிக்க வேண்டும்

## அநுர பிரியதர்ஷன யாப்பா

(கொழும்பு)

சமாதானத்திற்கான புதிய பிரவேசம் உருவாகியுள்ள இத் தருணத்தில் யுத்த நிறுத்த உடன்படிக்கையினைப் பாதுகாக்கும் பொருட்டு தமிழீழ விடுதலைப் புலிகள் செயற்பட வேண்டும் என அரசாங்கம் கேட்டுக் கொண்டுள்ளது.

விடுதலைப் புலிகள் பெப்ரவரி மாதம் 25ஆம் திகதி முதல் இன்று வரை 31 தடவைகள் யுத்த நிறுத்த உடன்படிக்கையினை மீறியுள்ள போதிலும் அரசாங்கம் பொறுமையினைக் கடைப்பிடிப்பதாக அமைச்சரவைப் பேச்சாளர் அநுர பிரியதர்ஷன யாப்பா சுட்டிக்காட்டியுள்ளார்.

அரசாங்க தகவல் திணைக்களத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் ஊடகவியலாளர் மாநாட்டிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

விசேடமாக யுத்தநிறுத்த உடன்படிக்கை மீறப்பட்டுள்ள இக் காலகட்டத்தில் 31 சம்பவங்கள் விடுதலைப் புலிகள் சார்பில் பதிவாகியுள்ளன.

பேச்சுவார்த்தைக்கான புதிய பிரவேசம் உருவாகியுள்ள இச் சந்தர்ப்பத்தில் நாம் பொறுமையுடன் செயற்படுகின்றோம். அரசாங்க இராணுவத் தரப்பினரும் பொறுமையாக செயற்படுகின்றனர்.

எனவே, விடுதலைப் புலிகளையும் ஜெனீவா உடன்படிக்கைக்கு அமைவாக நடந்துகொள்ளுமாறு அமைச்சரவைப் பேச்சாளர் கேட்டுக்கொண்டார். (த-4)

# இன விவகாரங்களுக்கென நிரந்தர நாடாளுமன்றக் குழு

## அமைக்கக் கோருகிறார் டியூ குணசேகர

(கொழும்பு)

இன விவகாரங்களுக்காக நிரந்தர நாடாளுமன்றக் குழு ஒன்றை அமைக்க வேண்டும் என்று அரசாங்கம் மற்றும் நாடாளுமன்ற சபாநாயகருக்கு அரசியல் யாப்பு அமைச்சர் டியூ குணசேகர பரிந்துரை அனுப்பியுள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறுகையில்,

நிரந்தர நாடாளுமன்றக் குழு அமைப்பதன் மூலம் இன விவகாரங்கள் தொடர்பாக விரிவாக விவாதிக்க முடியும். உதாரணமாக மொழி ரீதியான பாரபட்சம் காட்டப்படுமேயானால், இக் குழுவின் கவனத்துக்குக் கொண்டுசெல்ல முடியும். இத்தகைய முறைப்பாடுகளை இக் குழு விசாரிக்கும்.

இக் குழு அமைப்பது தொடர்பாக முதலில் நாடாளு மன்ற சபாநாயகருடன் விவாதிக்கப்பட்டு, அதன் பின்னர் அனைத்துக் கட்சித் தலைவர்களுடன் ஆலோசனை நடத்தப்படும் என்றார். (தி)

# புடைவைக் கைத்தொழில் நிறுவனங்கள் புனரமைக்கப்படும்

(கொழும்பு)

தமது அமைச்சின் கீழ் நஷ்டத்தில் இயங்கிவரும் நிறுவனங்கள் மஹிந்த சிந்தனையின் பிரகாரம் புனரமைக்கப்படுமென்று புடைவைக் கைத்தொழில் அபிவிருத்தி அமைச்சர் ஜயதிஸ்ஸ ரணவீர தெரிவித்தார்.

அதேசமயம் உள்ளூர் கைத்தறிப் புடைவைத் தொழிலை மேம்படச் செய்யவென 90 நாட்களுக்குள் திட்டமொன்று நடைமுறைப்படுத்தப்படும். பண்டாரநாயக்க சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் மூன்று நாட்கள் வரை நடைபெறவுள்ள கைத்தறிப் புடவைக் கண்காட்சியை நேற்று காலை ஆரம்பித்து வைத்த பின்னர் ஊடகவியலாளர் மத்தியில் உரை நிகழ்த்துகையிலேயே அவர் இந்தக் கருத்துக்களை வெளியிட்டார். கைத்தறித் தொழிலில் ஈடுபட்டுள்ளவர்களுக்கு உதவும் வகையில் இந்தக் கண்காட்சி ஒழுங்கு செய்யப்பட்டது.

கைத்தறிப் புடவைகளைக் கண்காட்சிக்கு வைப்பதற்கும், விற்பனை செய்வதற்குமான நிரந்தர நிலையம் ஒன்றை அமைப்பதற்குப் பொருத்தமான காணியைப் பெற்றுக் கொள்வதற்கென நகர அபிவிருத்தி அமைச்சுடன் பேச்சுக்கள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. (த-7)

# இரவுநேர வகுப்பு


(நல்லூர்)

நாயன்மார்கட்டு பாரதி மன்ற சனசமூக நிலையத்தினரால் நிலைய அங்கத்தவர்களின் குடும்பங்களைச் சேர்ந்த 9, 10 ஆம் தர மாணவர்களுக்கு இரவுநேர வகுப்புக்களாக ஆங்கிலமும், கணிதமும் கற்பிக்கப்படவுள்ளது.

இக் கற்பித்தல் எதிர்வரும் முதலாம் திகதி தொடக்கம் நடைபெறவுள்ளது. (த-134)

## தினசரி தியானம்

### விவேகச் சிந்தனைகள்



இயற்கையில் நீரானது தூய்மையானதாகவே இருக்கும். வேறு பொருள்கள் அதனுடன் கலப்பதாலேயே அது தூய்மை கெட்டுக் கலங்கி விடுகிறது. அந்த அசுத்தங்களை விலக்கிவிட்டால் அது மீண்டும் தெளிவடைந்து சுத்தமாகி விடும். ஆன்மாவின் களங்கத்தை ஞான விசாரணையின் மூலம் நீக்கிவிட்டால் ஆன்மா மீண்டும் பிரகாசத்துடன் வெளிப்படும்.

சுவாமி விவேகானந்தர்

# இராணுவக் காவலரண் மீது திருகோணமலையில் தாக்குதல்

(திருகோணமலை)

திருகோணமலை மகிந்தபுரம் இராணுவ முகாம்மீது நேற்று முன்தினம் இரவு சிறிய தாக்குதல் ஒன்று மேற்கொள்ளப்பட்டதாக இராணுவத்தினர் தெரிவித்துள்ளனர்.

திருகோணமலை பூநகர் விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டுப்பகுதியில் இருந்து நேற்று முன்தினம்இரவு 9.15 மணியளவில் விடுதலைப்புலிகள் இத் தாக்குதல்களை மேற்கொண்டதாக இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் பிரசாத் சமரசிங்க தெரிவித்தார்.

இத் தாக்குதலில் எவருக்கும் காயம் ஏற்படவில்லை எனவும் இது தொடர்பாக தாம் போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவிற்கு அறிவித்துள்ளதாகவும் இராணுவப் பேச்சாளர் கூறியுள்ளார்.

இதேவேளை விடுதலைப்புலிகள் இராணுவத்துடன் சேர்ந்தியங்கும் ஆயுதத் துணைப்படைகளால் இத் தாக்குதல் நடத்தப்பட்டதாகக் கூறுவதனை தாம் வன்மையாகக் கண்டிப்பதாகவும் பிரிகேடியர் பிரசாத் சமரசிங்க தெரிவித்தார். (ச-5.9)

# திருகோணமலையில் புலிகள்மீது தாக்குதல்

## போராளி வீரச்சாவு

(திருகோணமலை)

திருகோணமலை மகிந்தபுரத்தில் தமிழீழ விடுதலைப்புலிகள்மீது இனந்தெரியாதோர் நேற்று முன்தினம் இரவு நடத்திய தாக்குதலில் போராளி ஒருவர் வீரச் சாவடைந்துள்ளதாகவும் இருவர் காயமடைந்துள்ளதாகவும் திருகோணமலை அரசியல் துறைப் பொறுப்பாளர் சி.எழிலன் தெரிவித்துள்ளார்.

இந்தத்தாக்குதல்களை இராணுவத்துடன் சேர்ந்தியங்கும் துணை இராணுவக் குழுக்களே நடத்தியுள்ளார்கள் எனவும் அவர் கூறியுள்ளார்.

இந்தத் தாக்குதலை நடத்தியவர்கள் மகிந்தபுரம் இராணுவ முகாமிற்குள் சென்றதாகவும் இது தொடர்பான தகவல்களை போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவிற்கு தெரியப்படுத்தியுள்ளதாகவும்சி. எழிலன் தெரிவித்தார். (ச-5)

# திருகோணமலையில் பூரண ஹர்த்தால் இயல்பு வாழ்க்கை முற்றாகப் பாதிப்பு


(திருகோணமலை)

ஜெனீவா ஒப்பந்தத்தினை நடைமுறைப்படுத்த வேண்டும் என வலியுறுத்தியும் தாக்குதல்களைக்கண்டித்தும் கடல்வலயத் தடையினை நீக்குமாறு கோரியும் திருகோணமலையில் நேற்று பூரண ஹர்த்தால் அனுஷ்டிக்கப்பட்டது.

ஹர்த்தால் காரணமாக திருகோணமலையின் இயல்பு வாழ்க்கை முற்றாகப் பாதிக்கப்பட்டிருந்தது. திருமலை நகரில் அரச திணைக்களங்கள், பாடசாலைகள் ,தனியார் கல்வி நிறுவனங்கள் இயங்கவில்லை. கடைகள், வர்த்தக ஸ்தாபனங்கள் மூடப்பட்டிருந்தன.

வாகனப் போக்குவரத்துக்களும் மிகவும் குறைவாகவே காணப்பட்டது. கடைகள் அனைத்தும் மூடப்பட்டிருந்தமையால் நகரம் வெறிச்சோடிக்காணப்பட்டது.

பொலிஸாரும் படையினரும் பாதுகாப்புக் கடமையில் ஈடுபட்டிருந்தனர். நேற்றைய ஹர்த்தாலிற்கான அழைப்பினை திருமலை பொங்கு தமிழ் சமூகம் விடுத்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (ச-4,5)



பாகிஸ்தான் அரசாங்கத்தினால் இலங்கைக் கடற்படைக்கு வழங்கப்பட்ட ஷாஜகான் போர்க் கப்பல் கொழும்புத்துறைமுகத்தில் தரித்து நிற்கும் காட்சி.

# இறுதிப் போட்டி

(யாழ்ப்பாணம்)

கொக்குவில் வளர்மதி முன்னேற்றக் கழகத்தின் விக்ரம் - ராஜன் - கங்கு வெற்றிக் கிண்ணத்திற்கான இறுதியாட்டம் நாளை காலை 9 மணிக்கு கொக்குவில் இந்துக் கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ளது.

இறுதியாட்டத்தில் யாழ்.பல்கலைக்கழக அணியும் மானிப்பாய் பரிஸ் விளையாட்டுக் கழகமும் மோதுகின்றன. இந்நிகழ்வில் யாழ்.மாவட்ட கிரிக்கெட் ஆலோசகர் வி.கே. சண்முகலிங்கம் பிரதம விருந்தினராகவும் கொக்குவில் இந்துக் கல்லூரி அதிபர் பொ. கமலநாதன் சிறப்பு விருந்தினராகவும் கலந்து கொள்கின்றனர்.

இறுதியாட்ட நிகழ்வுகள் நிலையத் தலைவர் ப.பகீரதன் தலைமையில் நடைபெறவுள்ளது. (ச-12)

# முதியவரைக் காணவில்லை

(யாழ்ப்பாணம்)

உரும்பிராய் மேற்கு உரும்பிராயைச் சேர்ந்த கேதர் தர்மலிங்கம் 70 வயதுடைய முதியவர் வன்னி சென்று வரும் பொழுது முகமாலைச் சோதனைச் சாவடியில் தண்ணீர் குடிப்பதற்காகச் சென்றவர் மீண்டும் திரும்பி வரவில்லை எனத் தெரிவிக்கப்பட்டது.

இச்சம்பவம் தொடர்பாக நேற்று அவரது மகனால் மனிதஉரிமை ஆணைக்குழுவில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. (ச-133)

## அரசாங்கத்தின்...

இதனால் நாம் பொறுமையின் எல்லைக்கு தள்ளப்பட்டுள்ளோம். அமைதி வழியில் தீர்வு காணலாம் என்றே அரசாங்கத்துடன் ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டோம். இதன் மூலம் போரை நிறுத்துவது மட்டுமல்ல - தமிழர் தாயகத்தில் ஆக்கிரமித்து நிற்கும் அரச படைகளை படிப்படியாக விலக்கி இடம்பெயர்ந்த எமது தமிழ் மக்களை சொந்த இடங்களில் குடியமர்த்தலாம் என்று எண்ணினோம்.

ஆனால் இராணுவம் இதனைக் கவனத்தில் எடுக்கவில்லை. இதனால் அரசு மீதான நம்பிக்கையை நாம் இழந்துவிட்டு பொறு மையின் எல்லையில் நிற்கின்றோம் என்றார் சு.ப.தமிழ்ச் செல்வன். (ச)

## கட்டுநாயக்காவில்...

பொலிஸாரின் விசாரணைகளிலிருந்து தெரியவந்துள்ளதாக கொழும்பு ஊடகம் செய்தி வெளியிட்டுள்ளது.

சினைப்பர் துப்பாக்கியின் பாகங்கள் ஜேர்மனியில் தமிழர் ஒருவரால் தன்னிடம் கையளிக்கப்பட்டதாகவும் அதனைத் தான் கொழும்பில் மற்றொரு தமிழரிடம் கையளிக்கவிருந்ததாகவும் கைது செய்யப்பட்ட இளைஞர் தெரிவித்ததாகக் கூறப்பட்டுள்ளது. (ச-4)

## துணைக்குழுக்களின்...

விடயங்கள் குறித்து நேரடியாகப் பேச வேண்டும். வெறுமனே ஏனைய விடயங்கள் குறித்து பேசி காலத்தினை விரயம் செய்வதில் பயனேதும் கிட்டப்போவதில்லை.

நடைமுறையில் உள்ள யுத்த நிறுத்த உடன்படிக்கையில் அடிப்படைத் தவறுகள் நிறைய இருக்கின்றன. அவை விடுதலைப் புலிகளுக்கு சாதகமாகவே செயற்படுகின்றன.

அரசிற்கும் விடுதலைப்புலிகளுக்குமிடையில் கடந்த மாதம் ஜெனீவாவில் இடம்பெற்ற பேச்சுக்களும் அதன் பின்னர் இடம்பெறும் நிகழ்வுகளும் இராணுவத்திற்கு எவ்வித நம்பிக்கையையும் ஏற்படுத்தவில்லை என இராணுவத் தளபதி தெரிவித்தார்.

விடுதலைப்புலிகள் இன்னமும் இராணுவத்தினைச் சீண்டி ஆத்திர மூட்டும் செயல்களில் ஈடுபட்டு வருகிறார்கள். ஆனால் இவ்வாறான சம்பவங்கள் ஜெனீவாப்பேச்சுக்களுக்கு முன்னர் இடம்பெற்ற சம்பவங்களோடு ஒப்பிடும்போது பெரியளவிற்கு பாரிய சம்பவங்கள் அல்ல என்றார்.

இதேவேளை கடந்த நான்கு வருட யுத்தநிறுத்தத்தினால் மக்களுக்கு எவ்வித பயனும் கிட்டவில்லையென தெரிவித்த இராணுவத் தளபதி இராணுவம் யுத்தம் ஒன்றை ஒரு போதும் ஆரம்பிக்காது என்றாலும் எத்தகைய சவால்களுக்கும் முகம் கொடுக்க என் நேரத்திலும் தயாராகஇருப்பதாக இராணுவத் தளபதி மேலும் தெரிவித்தார். (ச-4)






## பவள் சகிதம் சென்ற...

யாழ்.உயர் தொழில் நுட்ப நிறுவனத்தில் நேற்றுக் காலை 10 மணிக்கு தமிழீழத் தேசியக் கொடியேற்றலுடன் அன்னைபூபதியின் நினைவு நாள் நிகழ்வுகள் நடைபெற்றன.

இதன்போது 5இற்கு மேற்பட்ட பவள் கவச வாகனங்கள் சகிதம் நிறுவனத்தைச் சுற்றி வளைத்திருந்த 500 மேற்பட்ட இராணுவத்தினர் திடீரென உட்புகுந்து அங்கிருந்த மாணவர்கள் மற்றும் விரிவுரையாளர்களைக் கடுமையாகத் தாக்கியதுடன் தமிழீழத் தேசியக் கொடியை கம்பத்திலிருந்து இறக்குமாறு பணித்ததுடன் கொடி , கம்பம் மற்றும் அன்னை பூபதியின் படம் என்பவற்றை எடுத்துச் சென்றனர்.

அப்போது அன்னை பூபதியின் உருவப் படத்தைச் சேதப்படுத்தியுமுள்ளனர். நிகழ்வுக்காக குழுமியிருந்த மாணவ, மாணவிகள் மீதும் இராணுவத்தினர் மேற்கொண்ட கண்மூடித்தனமான தாக்குதல்களில் 8 மாணவிகள் உட்பட 15 பேர் படுகாயமடைந்தனர்.

இதேவேளை நிறுவனத்தின் அலுவலகத்திற்குள் நுழைந்த இராணுவத்தினர் அங்கிருந்த உபகரணங்களையும் சேதப்படுத்தியதாகத் தெரிவிக்கப்பட்டது.

நிகழ்வை மாணவர்கள் படமெடுத்தபோது அவர்களின் கமராக்களும் கைத்தொலைபேசிகளும் பறிக்கப்பட்டுச் சேதமாக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

வளப்பற்றாக்குறையுடன் இயங்கிவந்த உயர் தொழிநுட்ப உபகரணங்களையும் இராணுவத்தினர் சேதப்படுத்தியுள்ளதால் அலுவலகம் செயற்பட முடியாத நிலை தோன்றியுள்ளதாகக் கவலை தெரிவிக்கப்பட்டது.

உயர் தொழிநுட்ப நிறுவனத்தினுள் அத்துமீறி நுழைந்த இராணுவத்தினர் மேற்கொண்ட தாக்குதல் சம்பவம் குறித்து மாணவர் அமைப்புக்கள் கண்டனம் வெளியிட்டுள்ளன.

இதேவேளை இச்சம்பவத்தைக் கண்டித்து அடுத்த வாரம் பகிஷ்கரிப்புப் போராட்டம் மேற்கொள்ளப்படவுள்ளதாக தெரிவிக்கப்பட்டது. (ச-132,133,4,5)









இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3 இரண்டாம் ஒழுங்கை பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில 25.03.2006 இல் அச்சிட்டுவெளியிடப்பட்டது.